89

44016

புத்தர் சரிதம்

15 JAN 1947

அருணகிரிநாதர்

Q4:33
N32-2
109125

ாலகிருஷ்ணக் கோன்
சென்னை.

BUDDHAR CHARITHAM

FOR HIGHER ELEMENTARY SCHOOLS

Pandit. S. S. Arunagirinathar

801

E. M. GOPALAKRISHNA KONE

MADURA 1946 MADRAS

Rights Reserved.

Price As. 12.

44016

1st Edition —1932
Revised Edition—1946

Printed at the Excelsior Power Press, Madura
P. I. C. Q. H. No. M. D. 21, Oct. 1946. 1000 Copies.

முன்னுரை

புத்த பகவானுடைய அரிய பெரிய சரிதத்தை மாணவர்களுக்கு ஏற்றவாறு எழுதியுள்ளேன். புத்த பகவானது அரிய போதனைகளை நன்ருக விளக்கியுள்ளேன். அதிகம் கூறுவதேன்? புத்த பகவானுடைய சரிதம்—போதனைகள்—ஆகிய இவைகளின் சாரத்தை இச்சிறு நூலில் பிழிந்து வைத்துள்ளேன். யான் இவ்வாறு கூறுவது 'தற்புகழ்ச்சியாகா'தென்று இப் புத்தகத்தை முற்றிலும் கவனித்துப் படிப்பவர்கள் கூறுவார்கள் என்றும் இதனைப் படிக்கும் மாணவர்கள் நல்லொழுக்கமிகுந்து சீலமுடையவர்களாய் விளங்குவார்கள் என்றும் நான் நம்புகிறேன்.

எஸ் எஸ் அருணகிரிநாதன்

விஷய அட்டவணை

அத்தியாயம்	விஷயம்	பக்கம்
1.	சாக்கியர் வரலாறு ...	1
	சித்தார்த்தர் பிறப்பு ...	6
2.	இளமைப் பருவம் ...	11
3.	சித்தார்த்தர் உலகை வெறுத்தல் ...	22
4.	சித்தார்த்தர் உண்மையை நாடிப் புத்தராதல் ...	35
5.	சுத்தோதனரும் புத்தரும் ...	52
	இறந்த குழந்தையை எழுப்பித்தர வேண்டல் ...	66
	பௌத்த சங்கம் ...	68
	பரத்வாஜர் சிஷ்யராதல் ...	73
	உயிர்ப்பலி தவிர்த்தல் ...	75
6.	புத்தரும் அவருடைய பகைஞர்களும்	77
7.	விருத்தாப்பியமும் அந்திய காலமும்	85
8.	புத்தரின் முன் ஜன்மக் கதைகள் ...	94



புத்தர், தவம்புரிதல் 42, உறவினர் சீடராதல் 60,
பிராணிகளிடத்தன்பு, வேடனை மன்னித்தல் 74.

புத்தர் சரிதம்

முதலாம் அத்தியாயம்

சாக்கியர் வரலாறு

உலகிலேயே இயற்கை வளங்களுக்கு உறைவிடமாய் அமைந்திருப்பது நமது இந்தியதேசமாகும். இத் தேசமானது பண்டைக் காலத்தில் அநேக இராஜ்ஜியங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. ஐம்பத்தாறு இராஜ்ஜியங்கள் அவைகளில் முக்கியமானவைகளாகும். அந்த ஐம்பத்தாறு இராஜ்ஜியங்களை ஆண்டுவந்த மன்னர்களுக்கு ஐம்பத்தாறு தேசத்து அரசர்கள் என்னும் பெயர் வழங்கி வந்தது. அந்த ஐம்பத்தாறு இராஜ்ஜியங்களில் சில ஒவ்வொரு காலத்தில் மற்ற இராஜ்ஜியங்களைப் பார்க்கினும் சிறப்புற்று இருந்தன. நமது சரிதம் ஆரம்பிக்கும் காலத்தில் கோசல இராஜ்ஜியம், மகத இராஜ்ஜியம், விதேக இராஜ்ஜியம் என்னும் இந்த மூன்று இராஜ்ஜியங்களும் சிறப்புற்று இருந்தன.

கபிலவஸ்து *

நிற்க, இப்போது நேபாளம் என வழங்கும் பிரதேசத்தில் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன்னால் கபிலவஸ்து என்னும் ஓர் இராஜ்ஜியம் இருந்து வந்தது. சிறப்புடன் கூடிய அந்த இராஜ்ஜியமானது, இமயமலைச்சாரலை அடுத்து இருந்தமையால் அது இயற்கை வளங்களுக்கு இருப்பிடமாய் இருந்து வந்தது. இமய மலைப் பிரதேசங்களிலிருந்து உற்பத்தியாகும் காணாறுகளும், பிறவும் இந் நாட்டினுடைய நீர் வளத்தை அதிகப்படுத்தி நிலவளத்தையும் செழுமையுறச் செய்தன. இப்பிரதேசத்தில் ரோகிணி என்னும் நதி பாய்ந்து, நாட்டின் வளப்பத்தை அதிகப்படுத்தியது.

இப்பிரதேசத்திற்கு வட எல்லையாய் அமைந்து இருப்பது இமயமலையாகும். ஆகாயத்தை அளாவி நிற்கும் இமயமலையானது இப்பிரதேசத்திற்கு ஒப்பற்ற அழகைக் கொடுத்து இதை விளக்கமுறச் செய்கின்றது.

நீர்வளத்தின் மிகுதியால் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், உழவுத் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். சந்தனம், தேக்கு, கருங்காலி, தேவதாரு முதலிய விருட்சங்கள் நாடெங்கும் பரவிக் கிடக்கவே, ஜனங்கள் அம்மரங்களை

* 'கபிலவாஸ்து' என்றும் வழங்குகின்றது.

வெட்டி அவைகளினால் பல விதமான பொருள்கள் செய்து வந்தார்கள்.

மேற்கூறிய இராஜ்ஜியத்திற்குத் தலைநகராய் முற்காலத்தில் அமைந்திருந்தது கபிலவஸ்து என்னும் ஒப்பற்ற நகரமாகும். இந்நகருக்கு கபில வஸ்து என்ற பேர் ஏற்பட்டதற்கு ஒரு காரணம் உண்டு:

அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னே வட இந்தியாவில் போடாலா என்னும் ஓர் இராஜ்ஜியம் இருந்தது. அந்த இராஜ்ஜியத்தை ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவனுக்கு நான்கு குமாரர்கள் பிறந்திருந்தார்கள். ஒருநாள் அரசனுடைய மனைவி, அரசனை அணுகி 'கணவரே, நமது கடைசி மகன் வாலிபப் பருவத்தை அடைந்தவுடன் அவனுக்கு இந்த இராஜ்ஜியத்தைக் கொடுத்து விட வேண்டும்,' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். அவள் அவ்வாறு கேட்டது தகுதியல்ல வென்பதை அரசன் உணராது, அவள்மீது கொண்ட பிரியத்தின் மிகுதியால் அவள் விண்ணப்பத்தின்படியே நடக்கச் சித்தமாய் இருப்பதாகக் கூறினான்.

அரசன் கூறியவைகளைக் கேட்ட அரசி மன மகிழ்ந்து இருந்தாள். இங்ஙனம் இருக்கையில் அரசனின் கடைசி மகனுக்குத் தகுந்த வயது வந்தது. அதைக் கண்ட அரசன், தன்னுடைய

முதல் மூன்று புத்திரர்களையும் நாட்டைவிட்டுத் துரத்திவிட்டு, நான்காவது புத்திரனுக்குத் தன் நாட்டைப் பட்டம்கட்டி வைத்தான்.

அரசனால் நாட்டினின்றும் துரத்தப்பட்ட மூன்று புதல்வர்களும் தங்களுடைய தலைவிதியை எண்ணிக் காட்டில் திரிந்துகொண் டிருந்தார்கள். அவர்கள் காட்டில் அகப்பட்ட காய் கனி கிழங்கு களையும், மாமிசவகைகளையும் தின்று ஜீவித்துக் கொண்டு வந்தார்கள்.

கபிலர் சந்திப்பு

அவர்கள் இவ்வாறு காட்டில் அநேக நாள் திரிந்து கொண்டிருந்தார்கள். இப்படி யிருக்கை யில் ஒரு நாள் அவர்களை ஒரு முனிவர் கண்டார். அந்த முனிவருடைய பெயர் கபிலர் என்பதாகும். அவர் அப் பிள்ளைகளினுடைய பரிதாப நிலைக்கு இரங்கி, அவர்களுக்கு ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டி அந்த இடத்தில் அவர்களை ஒரு பட்டணம் அமைத்துக் கொள்ளச் சொன்னார்.

முனிவர் சொல்லிய படியே அவ்வரசிளங் குமாரர்கள், முனிவர் குறிப்பிட்ட இடத்தில் ஒரு நகரத்தை அமைத்துக் கொண்டு அதில் வாழ்ந்து வந்தார்கள். கபிலர் என்ற முனிவரால் அந்நகரம் ஏற்படுத்தப்பட்டமையால், அந்நகருக்கு அவ்வரசி ளங் குமாரர்கள் 'கபிலருடைய பட்டணம்' என்று

பொருள் படும்படி 'கபிலவஸ்து' என்று பெயர் இட்டார்கள்.

கபில மகா முனிவர், அநேக நாள்வரை அப் பட்டணத்திலேயே இருந்து, அவ்வரசிளங் குமாரர் களுக்கு இராஜ்ஜிய சம்பந்தமான அநேக ஆலோ சனைகளைச் சொல்லிக் கொண்டு வந்தார். அம்முனி வருடைய ஆலோசனையின்படி, அந்த இராஜகுமா ரர்கள் நடந்து, சீரும் சிறப்பும், பேரும் புகழும் பெற்று வாழ்ந்து வந்தார்கள்.

அவர்கள் இவ்வாறு இருக்கையில், அவர்களை இராஜ்ஜியத்தினின்றும் துரத்திவிட்ட அவர்க ளுடைய தகப்பன், அவர்களுடைய கதி யாதாயிற்று என்பதைத் தெரிந்துகொண்டுவரச் சொல்லிச் சில தூதர்களை அனுப்பினன்.

அந்தத் தூதர்கள், இந்தியாவின் பல பக்கங் களிலும் சுற்றித்திரிந்து பார்த்தார்கள். கடைசி யில், அரசகுமாரர்களுடைய இருப்பிடத்தை, அந்த ஒற்றர்கள் கண்டுபிடித்து அதைப் பற்றி அரச னுக்குத் தெரிவித்தார்கள்.

அதை அரசன் கேட்டுத் தன்னுடைய குமாரர் களின் தைரியத்திற்கு மெச்சி, அவர்களைச் சாக்கி யர்கள் என்று புகழ்ந்து கூறினன். சாக்கியர்கள் என்பதற்குத் தைரியசாலிகள் என்பது பொரு ளாகும்.

சுத்தோதனர்

நாம் மேலே கூறிய அரச புத்திரர்களுடைய மரபில், அநேக அரசர்கள் தோன்றிச் சாக்கியர் என்னும் பெயருடன், தங்கள் முன்னோர்கள் ஸ்தாபித்த இராஜ்ஜியத்தை ஆண்டுவந்தார்கள். இவ்வாறு இந்தச் சாக்கியர்களுடைய மரபில் பிறந்து, அரசாட்சி செய்து வந்த அரசர்கள் எல்லோரிலும், சுத்தோதனர் என்னும் சீர் நிறைந்த அரசரே மிகச் சிறந்தவர் ஆவர். சுத்தோதனர் என்பவர் ஒரு சிறந்த யுத்த வீரர். அவர் தம் குடிகளை அன்புடன் ஆண்டுவந்தார். ஆகவே குடிகளும் அவரிடத்தில் பட்சமாகவே நடந்து கொண்டார்கள்.

சித்தார்த்தர் பிறப்பு

சுத்தோதனர், இரண்டு மனைவியர்களை விவாகஞ் செய்து கொண்டார். அவர்களில் ஒரு மனைவியின் பெயர் மாயாதேவி என்பது; மற்றொரு மனைவியின் பெயர் பிரஜாவதி என்பதாகும். இவர்கள் இருவருக்கும் நீண்ட நாட்களாகக் குழந்தை பிறக்க வில்லை. ஆகவே அரசர் மிகவும் மனம் வருந்தி இருந்தார்.

இப்படி இருந்து கொண்டிருக்கையில், அரசருடைய மூத்த மனைவியாகிய மாயாதேவி என்பவள், ஒரு கனவு கண்டு அதை அரசருக்குத் தெரிவித்தாள்.

அவள் கூறிய கனவின் பலனை அறிய எண்ணிய அரசர், அக் கனவைப் பற்றிப் பெரியோர்களிடம் எடுத்துரைத்தார்.

அவர் உரைத்த மொழிகளைக் கேட்ட அப்பெரியோர்கள், அரசருடைய மனைவியானவள் கூடிய சீக்கிரத்தில் முப்பத்திரண்டு இலட்சணங்களுடன் கூடிய ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பாளென்றும், அம்மகவு காலக்கிரமத்தில் நிகரற்ற சக்கரவர்த்தியானாலும் ஆகலாம்; அல்லது உலகமே போற்றும்படியான மதாச்சாரியராய் விளங்கினாலும் விளங்கலாம் என்றும் எடுத்துரைத்தார்கள்.

இவ்வாறு அப்பெரியார்கள் உரைத்தவைகளைக் கேட்ட அரசர், அப்பெரியார்களுக்குப் பலவிதமான பரிசுகளை அளித்து, அவர்களை அவர்களுடைய இருப்பிடங்களுக்குப் பலவித மரியாதைகளையும் செய்து அனுப்பினார்.

நாம் மேற்கூறிய பெரியார்கள் எடுத்துக் கூறியபடியே, அரசருடைய மூத்த மனைவியாகிய மாயாதேவி காலக்கிரமத்தில் கருப்பவதியானாள். அரசர் அதை அறிந்து மகிழ்ந்தார். பிரஜைகளும் அரசருடைய தேவி கருப்ப முற்றிருப்பதைக் கேட்டுக் கரைகடந்த சந்தோஷம் அடைந்தார்கள்.

இந்துக்களுடைய கொள்கைப்படி, முதல் கருப்பத்தின் போது ஒரு பெண்ணானவள், அவள் பிரசவிக்க மூன்று அல்லது நான்கு மாதங்கள்

இருக்கு முன்னரே, அவளை அவளுடைய பெற்றோர்கள் பிரசவத்திற்காகத் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்வது வழக்க மல்லவா? இவ்வழக்கத்திற் கிணங்கவே, மாயாதேவியையும் அவளுடைய தாய் வீட்டார், பிரசவத்திற்காகத் தங்களுடைய நாட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள்.

அவர்கள் வழியில் போய்க் கொண்டிருக்கையில் மாயாதேவிக்குப் பிரசவக் கஷ்டம் ஏற்பட்டது. பிறகு, மாயாதேவி வழியில் இருந்த ஒரு தோட்டத்தில் பிரமாண்டமான மரத்தின் அடியில், ஒப்பற்ற ஓர் ஆண் குழந்தையை நல்ல சுபமுகூர்த்தத்தில் பெற்றெடுத்தாள். குழந்தை பிறந்த போது, அநேக நன்னிமித்தங்கள் நிகழ்ந்ததாகப் பௌத்த மத ஆச்சாரியர்கள் கூறுகின்றார்கள்.

தமக்கு ஆண் குழந்தை பிறந்த செய்தியை அறிந்தவுடன் சுத்தோதனர், ஆனந்தக் கடலில் மூழ்கினர்; பொக்கிஷ சாலையில் இருந்த பணத்தையெல்லாம் ஏழைகளுக்கும், மற்று முள்ளவர்களுக்கும் வழங்கினர். அவருடைய இராஜ்ஜிய மெங்கும் குதூகலமாகவே இருந்தது.

'நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்,' என்பதற்கேற்ப, குழந்தை பிறந்த ஏழாவது தினத்தில், அரசருடைய மனைவி மாயாதேவி மரணமடைந்தாள். அவள் இறந்துவிடவே, அரசனுடைய இரண்டாவது மனைவியாகிய பிரஜாவதி

என்பவள், தன்னுடைய சககளத்தியின் குழந்தையைத் தன்னுடைய குழந்தையைப் போலப் பாது காத்து வளர்த்து வரலானள்.

பிறகு, பெரியோர் அக்குழந்தைக்கு நல்ல சுப முகூர்த்தத்தில் சித்தார்த்தர் என்னும் நாமகரணஞ் செய்தார்கள். அக்குழந்தை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகக் கண்டோர் வியக்குமாறு, பிறைச் சந்திரனைப் போல வளர்ந்து வந்தது. அதைக் கண்ட அரசரும், அரசியும், பிரஜைகளும், மற்றுமுள்ளவர்களும் மனமகிழ்ந்தார்கள்.

இவ்வாறு, குழந்தை வளர்ந்துகொண்டிருக்கையில், அரசருடைய அரண்மனைக்கு ஒரு முனிவர் வந்தார். அம்முனிவருடைய வருகையைக் கண்ட அரசர், அவரை எதிர்கொண்டு அழைத்து, அவருக்குத் தக்க இருக்கை யளித்து அவரை உபசரித்தார். பின்னர் அரசர், தம் குழந்தையை முனிவர் முன் கொண்டு வந்தார்.

குழந்தையைக் கண்ட முனிவர், அக்குழந்தையை உற்றுப் பார்த்துப் பிறகு அரசரை நோக்கி, ‘வேந்தே, இக்குழந்தை சாதாரணமானதென்று எண்ணுதே. இது பிற்காலத்தில் ஒப்பற்ற புண்ணிய புருஷனய் விளங்கும். இது இராஜ போகங்களை யெல்லாம் துறந்து, மானிடர்களால் பெரிதும் கொண்டாடப்படும் சிறந்ததொரு முனிவனய் மிளிரும்,’ என்று சொன்னர்.

முனிவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட வேந்தர், ஒரு புறம் ஆச்சரியமும் சந்தோஷமும், மற்றொரு புறம் துக்கமும் மன வருத்தமும் கொண்டார். எனினும், அவர் தம் கருத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல், குழந்தையின் பிற்கால வாழ்வை எண்ணி அக்குழந்தையின் முன் தலை வணங்கி நின்றார்.

பிறகு முனிவர் அவ்விடத்தை விட்டகன்றார்.

இரண்டாம் அத்தியாயம்

இளமைப் பருவம்

பிற்காலத்தில் கௌதமர், புத்தர், சாக்கிய முனிவர், சாக்கிய சிம்மன், ஜினன், பகவன் என்னும் பல பெருமை வாய்ந்த பெயர்களால் அழைக்கப் பெற்ற சித்தார்த்தர், தம் இளமைப் பருவத்தில் சகலவிதமான அங்க இலட்சணங்களோடும் விளங்கியபடியால், அவரைக் கண்டவர் அனைவரும் அவர் மீது அன்பும், ஆதரவும் கொண்டு மகிழ்ந்தார்கள். குழந்தையினுடைய மழலைச் சொற்களைக்கேட்ட அரசரும், அரசியும், மற்றுமுள்ளோரும் ஆனந்த சாகரத்தில் மூழ்கி இன்புற்று இருந்தார்கள்.

எனினும், அரசருக்குக் குழந்தையைக் காணுந் தோறும், முனிவர் எடுத்துக்கூறிய வார்த்தைகள் நினைவில் வந்துகொண்டிருந்தன. ஆகவே அரசர், 'என் மகன் சந்நியாசியாவானே,' என்று அடிக்கடி எண்ணி மனம் வருந்தினர்.

அரசர், தம்முடைய குமரர் தமக்குப் பின்னல், தம்முடைய இராஜ்ஜியத்தை ஆளவேண்டுமென்று பெரிதும் ஆவலுற்றிருந்தார். ஆகவே, அரசர் தம் குமாரருக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் சிறிதும் குறையாமல் செய்துகொண்டிருந்தார். அரசர், தம்மிளங் குமரர் கண்ணுக்கு

முன், துக்ககரமான செயல்கள் யாதொன்றும் நடக்கக் கூடாதென்று கண்டிப்பான உத்தரவு இட்டிருந்தார். பின்னும், அரசர் அங்க ஈனர்கள் அரசிளங் குமரருக்கு முன்னே வரக்கூடாதென்றும், அரசிளங்குமரர் கண் முன்னால் தோன்றுகிறவைகள் எல்லாம், இன்பகரமானவைகளாகவே இருக்க வேண்டுமென்றும் கட்டளை யிட்டிருந்தார்.

தம் இளங் குமாரருடைய பாதுகாவலுக்கென்று அரசர், அநேகம் அழகிய தாதிகளை நியமித்திருந்தார். அத்தாதிகள், நிழலைப்போல அரசிளங் குமரரைச் சிறிதும் விட்டு அகலாமல் அவர் அருகிலேயே இருந்து, அவரை மகிழ்வித்து வந்தார்கள். வளர்ந்து கருத்தறிந்த பிறகு அரசிளங் குமரர் காலால் இட்ட வேலைகளைச் செய்ய அநேக வேலைக்காரர்கள் சித்தமாகக் காத்துக்கொண்டு இருந்தார்கள்.

சாக்கியர்கள், உழவுத் தொழிலைப் பிரதானமாக மேற்கொண்டு இருந்தார்கள். அரசருக்குத் தனிச்சொத்தாக அநேக ஏக்கர் விஸ்தீரணமுள்ள நன்செய் நிலங்கள் இருந்து வந்தன. அவைகளை உழுது பயிரிடுவதற்காக அரசர், அநேக உழவர்களைத் தம்மிடத்தில் வைத்துக் கொண்டிருந்தார்.

இந்திர விழா

பயிர்த் தொழிலுக்கு முக்கியமாக வேண்டப்படுவது மழையல்லவா? ஆகவே சாக்கியர்கள்

வருடந் தோறும் மழைக்குக் கர்த்தாவாகிய இந்திரனுக்கு விழா வியற்றி அவனைக் கொண்டாடுவது வழக்கம். இத் திருவிழா நடைபெறும்போது 'கபிலவஸ்து' நகரத்தைச் சேர்ந்த மாந்தர்கள் அனைவரும் தங்களை ஆடை அணிகளால் அலங்கரித்துக் கொண்டு, திருவிழா நடைபெறும் இடத்திற்குச் செல்லுவது வழக்கம். விழாவின்போது அரசரும், மந்திரிகளும், மற்றுமுள்ள பிரதானிகளும் பொன்னால் அலங்கரிக்கப் பட்ட ஏர்களைக் கொண்டு நிலத்தை உழுவது வழக்கம். நிலத்தை அவர்கள் சிறிது உழுத பின்னர், மற்றக் குடியானவர்கள் நிலத்தை உழுவார்கள்.

விழாவிற்குச் செல்லல்

சித்தார்த்தர் சிறுவராய் இருக்கும்போது அரசர், அவரை இத் திருவிழாவிற்கு ஒரு முறை அழைத்துக்கொண்டு போனார்.

அரசிளங் குமரர் தங்குவதற்கென ஒரு கூடாரம் அமைக்கப் பட்டது. அதில் தக்க ஆசனத்தில் அரசிளங்குமரர் வீற்றிருந்தார். அவரைச் சுற்றிலும் தாதியர்கள் சூழ்ந்து கொண்டிருந்தார்கள்.

தாதியர் கண்ட காட்சி

உற்சவம் ஆரம்பமாயிற்று. அரசர் பொன்னால் அலங்கரிக்கப் பட்டிருந்த ஏரைக் கொண்டு நிலத்தை உழ ஆரம்பித்தார். அதைக் காண்ப

தற்குத் தாதியர்கள், அரசிளங் குமரரை விட்டுச் சென்றூர்கள். நெடு நேரமாகியும் தாதியர்கள் திரும்பி வரவில்லை. சூரியனும் ஆகாயத்தில் வெகு தூரம் வந்து விட்டான். அதைக் கண்ட தாதியர் கள், 'குழந்தை எங்கே வெயிலில் கஷ்டப்படு கிறதோ,' வென்றெண்ணி ஓடோடியும் வந்தார்கள். அரசிளங் குமரர் இருந்த இடத்தில் மாத்திரம், மரத்தின் நிழல் இயற்கைக்கு விரோதமாக நன் ரூகப் பரவி இருந்ததையும், மற்ற இடங்களில் இருந்த மரங்களினுடைய நிழல் சூரியனுடைய நிலைக்குத் தகுந்தபடி சென்று விட்டதையும் கண்ட தாதியர்கள், பெரிதும் ஆச்சரியங்கொண்டு இவ் விசேஷத்தை அரசருக்குத் தெரிவித்தார்கள்.

அரசர் வந்து பார்த்துத் தம் குழந்தை தெய் வக் குழந்தையே யாகுமென்று கருதி, அதற்குத் தலைவணங்கினர்.

கல்வி கற்றல்

சித்தார்த்தருக்கு வயது ஐந்தாயிற்று. 'எண் ணும் எழுத்தும் கண் எனத்தகும்,' என்பதற்கு இணங்க அரசர், சித்தார்த்தரைத் தகுந்த ஓர் ஆசிரியர் இடத்தில் கல்விகற்க ஏற்பாடு செய்தார்.

சித்தார்த்தர், தம் ஆசிரியரிடத்தில் இலக்கண இலக்கியங்களையும், கணக்குகளையும் சந்தேக மின்றிக் கற்றுக்கொண்டார். அதோடு சித்தார்த் தர் நின்றுவிடாமல், அரசர்களுக்குரிய யானையேற்

றம், குதிரையேற்றம், வில்வித்தை, வாள்வித்தை முதலிய படைக்கலப் பயிற்சிகளையும் தக்க ஆசிரியர்களிடத்தில் கற்றுக் கொண்டார்.

'புலிக்குப் பிறந்தது பூனையாய் விடாது,' என்பதற்கிணங்க, அரசிளங்குமரர், எல்லாவித்தைகளிலும் தமது தந்தையைப் போலவே சிறப்புற்று விளங்கினார். அதைக்கண்ட அரசர், பெரிதும் சந்தோஷங் கொண்டு இறுமாந்திருந்தார்.

விளையாட்டு

சித்தார்த்தர், தம் சிற்றன்னையின் குமாரனாகிய நந்தனோடும், தம் அத்தையின் குமாரனாகிய தேவதத்தனோடும் உரோகிணி நதிக்கரையில் பற்பலவிதமான விளையாட்டு விநோதங்களில் ஈடுபட்டுத் தம்முடைய காலத்தைச் செலவழிப்பது வழக்கம்.

சித்தார்த்தர், சிறுவராய் இருக்கும்போது தம்மை ஆடைகளாலும், அணிகளாலும் அலங்கரித்துக் கொண்டு, தம்முடைய வேலைக்காரர்கள் புடைசூழ ஊர்வலம் வருவார். சித்தார்த்தர், தம்முடைய இளமைப் பருவத்தைக் குறித்துச் சொல்லுகையில், 'நான் பட்டாடைகளை அணிந்து கொண்டு இருந்தேன். நான் உலவச் செல்லுகையில் என்னுடைய வேலைக்காரர்கள் எனக்கு வெள்ளைக்குடை ஒன்றைப் பிடித்துக்கொண்டு வருவார்கள்,' என்று கூறி இருக்கின்றார்.

வேட்டைக்குச் செல்லல்

க்ஷத்திரியர்களுக்கு வேட்டை யாடுதல் முக்கிய மான தொழிலல்லவா? அதற்கிணங்க, நமது அரசி ளங் குமரர் சித்தார்த்தர், தம்முடைய சிநேகிதர் களுடன் பல காடுகளுக்குச் சென்று தம் எதிரில் அகப்பட்ட மிருகங்களை வேட்டை யாடிக் கொல்ல எண்ணுவார். ஆனால் மிருகங்களைக் கண்டவுடன், அவருக்குச் சிறுவயது முதற்கொண்டே, அவை களிடத்தில் ஏற்பட்டிருந்த இரக்கம் காரணமாக, அவர் அவைகளைக் கொல்லாது விட்டுவிடுவார். அவர் மனத்தில் என்றும் இரக்கம் என்னும் பெருங்குணம் ஓங்கி வளரலாயிற்று.

கோடைக் காலத்தில் சித்தார்த்தர், தம்முடைய சிநேகிதர்களுடன் சேர்ந்து அரண்மனைத் தோட் டத்தில் தமக்கு இஷ்டமான விளையாட்டுக்களை யெல்லாம் விளையாடுவார். அவருக்கு இரதத்தில் ஏறி ஊரைச் சுற்றி வருவதில் பிரியம் அதிகம். மாரிக் காலத்தில் சித்தார்த்தரும், அவருடைய நண்பர்களும் அரண்மனைக் குள்ளிருந்தபடியே தங்களுக்குப் பிரியமான விளையாட்டுக்களை யெல் லாம் விளையாடுவார்கள். விளையாடாத போது அவர்கள், ஒருவருக் கொருவர் கதைகளைச் சொல் லிக் காலங் கழிப்பார்கள். சில சமயங்களில் அவர் கள், கற்று வல்ல பெரியோர்களின் மூலமாகப் பல கதைகளைக் கேட்டு மகிழ்வார்கள்.

தேவதத்தன் வெறுப்பு

சித்தார்த்தருடைய அத்தை மகன், தேவதத்தன் என்பவன் நல்ல குணம் வாய்ந்தவன் அல்லன். அவன், சித்தார்த்தருடைய நற்குணங்களைக் கண்டு அவர் மீது பொறாமை கொண்டான். அவரை ஜனங்களெல்லோரும் கொண்டாடி வருவது தேவதத்தனுக்குப் பிடிக்க வில்லை. ஆகவே அவன் அவரை அடிக்கடி வெறுத்து வந்தான். இவ்வெறுப்பு நாளடைவில் வளரலாயிற்று.

பராக்கிரமம்

அப்போது உரோகிணி நதிக்கரையில் வளர்ந்திருந்த ஆல விருட்சம் ஒன்று, காற்றினால் மோதப்பட்டு ஆற்றின் நடுவில் வீழ்ந்து விட்டது. அதனால் ஆற்றில் ஜலம் பெருக்கெடுத்து நகரத்தின் தெருக்களில் வந்து பாய்ந்தது. அதைக் கண்ட ஜனங்கள், தங்களுடைய கட்டடங்களுக்கு ஆபத்து வந்து விடுமோ என்னவோ வென்று எண்ணிப் பயந்தார்கள். சாக்கிய வீரர்கள், தங்களால் கூடுமான வரையில் மரத்தை ஆற்றின் நடுவிலிருந்து எடுத்து விட முயற்சித்தார்கள். அவர்கள் என்ன முயன்றும் அவர்களால் அதை எடுக்க முடியவில்லை. ஆனால் சித்தார்த்தர், அதைச் சுலபமாய் ஆற்றிலிருந்து எடுத்து விட்டார். அதைக் கண்ட ஜனங்கள், சித்தார்த்தருடைய புஜபல பராக்கிரமத்திற்காக அவரை வியந்தார்கள்.

பறவையைப் பாதுகாத்தல்

சித்தார்த்தர், ஒரு நாள் தம் நண்பர்களுடன் அரண்மனைத் தோட்டத்தில் உலவிக்கொண்டிருந்தார். அப்போது ஆகாயத்தில் காட்டுப் புறாக்கள் பறந்து சென்றன. அவைகளைக் கண்ட தேவதத்தன், தன் கையில் இருந்த அம்பினால் அவைகளில் ஒன்றை அடித்து வீழ்த்தினான். காயமடைந்த அக்காட்டுப் புறா, சித்தார்த்தருக்கு முன்பாகக் கீழே விழுந்தது. அதன் உடலிலிருந்து இரத்தம் ஒழுகியது.

அக் கோரமான காட்சியைக் கண்டு சித்தார்த்தர், மனம் இரங்கி அப்பறவைக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைகளைச் செய்து, அதனுடைய கஷ்டத்தை ஒருவாறு நீக்கினார்.

இதற்குள் தேவதத்தன், சித்தார்த்தர் இருந்த இடத்திற்கு ஒரு தூதனை அனுப்பி, அப்பறவையை வாங்கிக் கொண்டு வரச் சொன்னான்.

தூதன், சித்தார்த்தரிடம் வந்து பறவையைக் கொடுக்கும்படி கேட்டான். சித்தார்த்தர், அப்பறவையைத் தாம் காப்பாற்றிய படியால், அது தமக்குச் சொந்தமாகு மென்றும், அதனைக் கொல்ல எண்ணி அடித்து வீழ்த்திய தேவதத்தனுக்கு அது உரிமை யாகாதென்றும் சொல்லி அத்தூதனை அனுப்பி விட்டார்.

அத்தூதன், அவ்வார்த்தைகளைக் கேட்டு மனம் உடைந்து, தேவதத்தன் இருந்த இடத்திற்குச் சென்று சித்தார்த்தர் கூறியவைகளை எடுத்துரைத்தான்.

அவைகளைக் கேட்ட தேவதத்தன், சித்தார்த்தர் மீது வெறுப்புக் கொண்டான். எனினும், அதனை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் அவன் சித்தார்த்தருடன் அளவளாவிக் கொண்டிருந்தான்.

விவாகம்

சித்தார்த்தர் யௌவன பருவத்தை அடைந்தார். அதனைக் கண்ட அரசர், அவருக்குக் கலியாணம் செய்ய எண்ணி, அழகிலும் குணத்திலும் சிறந்த யசோதரை என்பவளை அவருக்குக் கலியாணம் செய்து வைத்தார்.

சித்தார்த்தர் வசிப்பதற்கென அரசர், அநேக மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும் கட்டிக் கொடுத்தார். அரசிளங்குமரருக்கு எவ்வளவு சௌகரியம் வேண்டுமோ அவ்வளவு சௌகரியத்தையும், அவர் அனுபவிப்பதற்கு வேண்டியயெல்லா ஏற்பாடுகளையும் அரசர் செய்து முடித்தார். சித்தார்த்தருடைய மாளிகை தேவலோகத்து மாளிகையைப் போலப் பொலிவுற்று விளங்கியது.

இந்திர போகம்

அரசிளங்குமரர், இந்திர போகத்துக்கு ஒப்பான தொரு போகத்தை அனுபவித்துக் கொண்டு வந்தார். அதைக் கண்டு அரசர், ஒருவாறு ஆறுதல் அடைந்து இருந்தார்.

அரசர், இவ்வாறு இருக்கையில் அரசருடைய சகோதரர்கள், ஒருநாள் அரசரைச் சமீபித்து, 'வேந்தே! இளவரசர் எல்லாவிதமான நற்குணங்களுக்கும் உறைவிடமாய் இருக்கிறார் என்பதில் கொஞ்சமும் ஐயம் இல்லை. எனினும், அவர் இராஜ்ஜிய பரிபாலன சம்பந்தமான விஷயங்களில் ஈடுபடாமல், உலக இன்பங்களிலேயே சதா திளைத்துக்கொண் டிருப்பது நம்மைப் போன்ற அரசர்களுடைய மரபுக்கு ஏற்ற காரிய மல்லவே,' என்று கூறினார்கள்.

அவர்கள் கூறிய வார்த்தைகளுக்கு அரசர், தக்க சமாதானம் சொல்லி அவர்களை அனுப்பி விட்டுத் தாம் தம் குமாரரை அழைத்து, அவரிடம் தம் சகோதரர்கள் தம்மிடம் எடுத்துக் கூறியவைகளை யெல்லாம் விவரமாகச் சொன்னார்.

அரசர் கூறிய வார்த்தைகளைக் கேட்ட அரசிளங்குமரர், அரசரை நோக்கி, 'தந்தாய்! தாங்கள் எதற்கும் அஞ்சவேண்டா. நம் தேசத்திலுள்ள வீரர்களெல்லோரும் தங்கள் தங்கள் போர்த்

திறமையைக் காட்டுவதற்கான ஏற்பாடு ஒன்றை நீங்கள் செய்யுங்கள். அதில் நான் என்னுடைய திறமைகளை யெல்லாம் காட்டுகின்றேன்.' அப்போது நமது பந்துக்களுக்கு என்னைப்பற்றி ஏற்பட்டிருக்கும் சந்தேகங்கள் அறவே ஒழிந்து விடும்,' என்றார்.

போர்த் திறமை

அரசிளங்குமரர் கூறியவைகளைக் கேட்ட மன்னர், அதிக சந்தோஷம் அடைந்து, தம் குமாரர் விரும்பியபடியே யாவற்றையும் செய்து முடிக்க எண்ணி, அதற்கான ஏற்பாடுகளை யெல்லாம் செய்து கொண்டு வரலானார். கடைசியில் குறிப்பிட்ட நாளும் வந்தது. வீரர்கள் அனைவரும் தங்களுடைய போர்த்திறமையைக் காட்டுவதற்காகக் கூட்டம் கூட்டமாகக் குறிப்பிட்ட இடத்தில் வந்து சேர்ந்தார்கள். சேர்ந்தவர்கள் தங்களுடைய திறமைகளை யெல்லாம் காட்டினார்கள். சித்தார்த்தரும் தம்முடைய திறமைகளைக் காட்டினார்.

அதைக் கண்ட மக்கள், "எல்லோரையும் விடச் சித்தார்த்தருடைய போர்த் திறமையே சாலவும் மெச்சத் தக்கவை" யென்று ஒரே விதமாகக் கூறினார்கள். அவர்கள் கூறியவைகளைக் கேட்ட வேந்தர், பெரிதும் சந்தோஷித்துத் தம் புதல்வனைக் கட்டி முத்தமிட்டு மகிழ்ந்தார்.

மூன்றும் அத்தியாயம்

சித்தார்த்தர் உலகை வெறுத்தல்

இன்ப வாழ்க்கை

சித்தார்த்தர் தமக்கு இருபத்தொன்பது ஆண்டுகள் ஆகும்வரையில், இப் பூலோக சம்பந்தமான சுகங்கள் யாவற்றையும் வேண்டிய மட்டும் அனுபவித்துக் கொண்டு, அரசர் மகிழும் வண்ணம் இந்திரனைப் போல இருந்து வரலானார்.

சிறு வயது முதற் கொண்டே சித்தார்த்தருக்கு மிருகங்களிடத்திலும், பறவைகளிடத்திலும், மாந்தர்களிடத்திலும், மற்றுமுள்ள ஜீவராசிகளிடத்திலும் அன்பு ஏற்பட்டு அது மேன்மேலும் வளர்ந்து கொண்டு வந்தது.

அரசர், தம்மால் கூடியவரையில் சித்தார்த்தர் கண்ணுக்குக் கஷ்டங்கள் புலப்படா வண்ணம் இருப்பதற்கு ஏதுவான காரியங்கள் பலவற்றையும் செய்து கொண்டு வந்தார். அதனல் அரசிளங்குமரர் தேர் ஊர்ந்து செல்லும்போதெல்லாம், உலக இன்பங்களைக் கண்டு களிக்கச் சந்தர்ப்பங்கள் வாய்த்தனவே யல்லாது, உலகத்தின் துன்பங்களைக் காண அவருக்குச் சந்தர்ப்பம் சிறிதும் ஏற்பட வில்லை. ஆகவே அரசிளங்குமரர், 'உலகி

லுள்ள சகல ஜீவராசிகளும் தம்மைப் போலவே இன்புற்று இருக்கின்றன' வென்று எண்ணி யிருந்தார்.

சித்தார்த்தர் வசித்து வந்த அரண்மனையைச் சூழ்ந்து தோப்புகளும், துறவுகளும், தோட்டங் களும், குளங்களும், நீர்த் தொட்டிகளும் இருந்து வந்தன.

மரக்கிளைகளில், கோகிலம், சாகுந்தலம் முதலிய பக்ஷிகள், தம் இனிய ஓசையினால் கேட் போர் மனமகிழும் வண்ணம் பாடிக்கொண் டிருந் தன.

தடாகங்களில் தாமரை மலர்கள் மலர்ந்து கண் களுக்கு ஆனந்தத்தை உண்டாக்கிக் கொண்டிருந் தன. மரக்கிளைகளில் குரங்குகள் பலப் பல தாவிக்கொண்டும், ஓடிக்கொண்டும் இருந்தன.

புன்னை, மந்தாரை, மரமல்லி, மல்லிகை, முல்லை, இருவாட்சி, சண்பகம் முதலிய பூக்களின் நறுமணம் மனத்திற்குப் பெரும் இன்பத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தன. மலர்களி லுள்ள தேனை யுண்டு மதி மயங்கிக் கிடக்கும் வண்டுகளின் ரீங்காரம் செவிகளுக்கு ஒரு நல் விருந்தாயிருந்தது.

ஊர்வலம்

சித்தார்த்தர், ஒரு நாள் பூங்காவனத்திற்குச் சென்று இயற்கை விநோதங்களைக் கண்டு களிக்க

எண்ணித் தம்முடைய கருத்தைத் தம் இரத சாரதி இடம் தெரிவித்தார். அரசிளங் குமரருடைய உள்ளக் கருத்தை உணர்ந்த இரத சாரதி, இரதத்தை அலங்கரித்துக் கொண்டு வந்து அரசிளங்குமரரின் அரண்மனைக்கு எதிரில் நிறுத்தினன். சித்தார்த்தர் தம்மை ஆடை அணிகளால் அலங்கரித்துக்கொண்டு இரதத்தில் அமர்ந்தார். இரதமும் வாயுவேக மனோ வேகத்துடன் சென்றது.

அரசிளங் குமரர் ஊர்வலம் வருவதைக் கண்ட ஜனங்கள், எல்லோரும் அவரைக் கண்டு களிப்பதற்காகத் தெருக்கள் தோறும் அணி வகுத்து நின்று கொண்டிருந்தார்கள்.

பிச்சை எடுப்பவர்களைக் கண்டு வருந்தல்

சித்தார்த்தருடைய இரதம் தெருக்களின் வழியாகச் சென்றுகொண்டிருந்தபோது, ஒரு தெருவின் கோடியிலிருந்து தள்ளாத வயோதிகன் ஒருவன், கூன் முதுகுடன் கையில் கோலை ஊன்றிக் கொண்டு, பரிதாபகரமான குரலில் தனக்குப் பிச்சையிட வேண்டுமென்று இரந்து கொண்டே போனன். அக்கிழவனைச் சித்தார்த்தர் கண்டார்; கண்டதும் அவருடைய மனம் திடுக்கிட்டது; இன்னது செய்வதென அவருக்குத் தோன்றவில்லை.

அரசிளங் குமரருடைய முகவாட்டத்தைக் கண்ணுற்ற சாரதி, அரசிளங் குமரரை நோக்கி, 'ஐயரே, சிறிது நேரத்திற்கு முன்வரையிலும் தங்

கள் முகமானது, அன்று பூத்த செந்தாமரை மலரினை ஒத்திருந்தது. இப்போது அத்தகைய முகப்பொலிவு யாவற்றையும் தாங்கள் இழந்து, இடியோசையைக் கேட்ட நாகமே போன்று அசைவற்று நிற்கக் காரணம் யாது?' என்று பணிவுடன் வினவினன்.

அதன்மேல் அரசகுமாரர், சாரதியைப் பார்த்து, 'ஏ சாரதி! சிறிது நேரத்திற்கு முன் என் கண்முன் தோன்றிய மனிதன் விகாரமாகக் காணப்பட்டான். அவன் அப்படி இருப்பதற்குக் காரணம் என்ன?' என்று கேட்டார்.

தேவர்கள் போதனை

சித்தார்த்தருக்கு உலகத்தின் இயல்பை உள்ளது உள்ளபடியே உணர்த்த எண்ணியிருந்த தேவர்கள், இதுதான் தக்க தருணம் என்று கருதிச் சாரதியின் வாய்மொழியாகத் தங்களுடைய கருத்தை அவருக்கு எடுத்துரைக்கக் கங்கணம் கட்டிக்கொண்டார்கள். அவர்கள் தூண்டுதலின் வயப்பட்டவனாகிய சாரதி, அரசிளங் குமரரை நோக்கி, 'அரசே, இதுதான் விருத்தாப்பியம் எனப்படும். நம் கண்ணுக்குமுன் தோன்றிய மனிதன் தன் விருத்தாப்பியம் காரணமாக அவ்வாறாயினன். நாமும் அக்கிழவனைப் போலவே, நீண்டநாள் இவ்வுலகத்தில் இருந்தால், நரை, திரை, மூப்பு முத

லானவைகளுக்கு இரையாகி அவனைப் போலவே கஷ்டப்படுவோம்,' என்று பதிலளித்தான்.

வெறுப்பு

சாரதி கூறியவைகளைச் செவியுற்ற அரச குமாரருக்கு வேறெதிலும் நாட்டம் செல்லவில்லை. அவர், சாரதியை விளித்து இரதத்தை அரண்மனைக் குத் திருப்பும்படியாகக் கட்டளை யிட்டார். அதற் கிணங்கிய சாரதியும் இரதத்தை அரண்மனைக்குத் திருப்பி ஓட்டினன். அரண்மனை சேர்ந்ததும் அரச குமாரர், இன்பங்கள் பலவற்றையும் ஒருங்கே விலக்கி, வருத்தத்தினல் பீடிக்கப்பட்ட மனமுடைய வராய் இருந்து வரலானர்.

இளங்கோவினுடைய முகவாட்டத்தின் கார ணத்தை அறிந்த சுத்தோதனருக்குத் தம் குமார ரைக் குறித்து இருடிகள் எடுத்துக் கூறிய விஷயம் ஞாபகத்துக்கு வந்தது; அஃது அவரை வருத்திக் கொண்டு இருந்தது.

சந்தோஷம்

அரண்மனையைச் சேர்ந்த நாட்டியப் பெண் கள், தங்களுடைய ஆடல் பாடல்களினுலும், கேளிக்கை விலாசங்களினுலும், அரச குமார ருடைய வருத்தத்தைச் சற்றே மாற்றினர். காலக் கிரமத்தில் அரச குமாரர், எப்போதும் இருந்

ததைப்போலவே சந்தோஷமாகக் காலங்கழிக்க ஆரம்பித்தார். அதைக் கண்ட சுத்தோதனர் சந்தோஷித்தார்.

நோயினால் வருந்துபவனைக் கண்டு வருந்தல்

பின்னர், ஒருநாள் அரசிளங் குமரர் இரதத்தில் அமர்ந்து கொண்டு, சாரதியுடன் ஊரைச் சுற்றிவர ஆரம்பித்தார். அப்போது வழியில் ஒரு கிழவன் படுத்துக்கொண்டு நோய் காரணமாய், 'ஐயோ, அப்பா, அம்மா,' என்று கூச்சலிட்டவண்ண மிருந்தான். அக் கிழவனது கூச்சல் அரசிளங் குமரருடைய செவியிற் பட்டது. உடனே அரசிளங் குமரர், இரதத்தை நிறுத்தி விட்டு அக் கிழவனை உற்றுப் பார்த்தார். எனினும் அவருக்கு ஒன்றும் புலப்படவில்லை. ஆகவே, அரசிளங் குமரர், சாரதியை நோக்கி, 'ஏ சாரதியே! இக் கிழவன் படுத்துக் கொண்டிருக்கின்ற இடத்தை விட்டு நகரவும் முடியாமல் இங்ஙனம் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கின்றானே! இதற்குக் காரணம் யாது?'' என்று உசாவினர்.

தேவதூதனின் போதனை

தேவர்களின் தூண்டுதலுக்கு அடிமைப்பட்டவனாகிய சாரதி, 'இக்கிழவன் நோய் காரணமாக இவ்வாறு கஷ்டப்படுகின்றான். இவ்வுலகத்தில் நோய் நொடிகளுக்கு இரையாகாத மனிதர் ஒரு

வரும் கிடையார். இன்றைக்கு நல்ல நிலைமையில் இருப்போர், நாளைக்கே நோய் வாய்ப்பட்டுத் துன்பப்படினும் படுவர்,' என்று பதில் சொன்னான்.

உடனே அரசிளங் குமரர், இரதத்தை அரண்மனைக்குச் செலுத்தும்படி கட்டளையிட்டார். அரண்மனையைச் சேர்ந்த அரசிளங் குமரர் மனம் வாடிய வண்ணமாய் இருந்தார்.

அரசிளங் குமரருடைய மன வாட்டத்திற்குரிய காரணத்தை அறிந்த சுத்தோதனர், 'தம் குமாரரைக் குறித்து இருடிகள் மொழிந்த தீர்க்க தரிசனங்கள் நான்கில் இரண்டு பலித்து விட்டன வென்றும், மற்றுமுள்ள இரண்டு தீர்க்க தரிசனங்களும் பலித்து விடின், தமது குமாரர் நிச்சயமாய் இவ்வுலகத்தைத் துறந்து, சந்நியாசியாய் விடுவார்' என்றும் எண்ணி வருந்தலானார்.

பிணத்தைக் காணல்

மறுபடியும் சித்தார்த்தர் ஒருதினம் பூங்காவனத்திற்குப் போகப் புறப்பட்டார். அப்போது சில ஜனங்கள் ஒரு பிணத்தைத் தூக்கிக் கொண்டு சென்றார்கள். அதைக் கண்ட சித்தார்த்தர், சாரதியின் மூலம் இந்த உலகத்தில் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒரு காலத்தில் இறக்கவே வேண்டுமென்றும், சாகாமல் இருப்பவர்கள் ஒருவரும் இல்லையென்றும் அறிந்து கொண்டார். உடனே

சித்தார்த்தர் அரண்மனைக்குத் திரும்பிச் சென்றார். 'ஜனங்கள் சாக்காட்டினின்றும் நீங்குவதற்குரிய வழி யாதொன்றும் கிடையாதோ' வென்று அவர் சிந்திக்கலானார்.

இருடிகள் சித்தார்த்தரைக் குறித்து எடுத்துக் கூறிய தீர்க்க தரிசனங்கள் நான்கில், மூன்று பலித்துவிட்டதைக் கண்ட அரசர், பெரிதும் வருந்தினர்; சித்தார்த்தர் எங்கேனும் ஓடிப்போகாமல் இருப்பதற்கு, நகரத்தின் பல பக்கங்களிலும் காவலாளர்களை அதிகப் படுத்திக் காவல் புரிந்து வருமாறு கட்டளை யிட்டார்.

அரசரும் அவருடைய பந்துக்களும் மந்திரி பிரதானிகளுங்கூட நகரத்தின் பல வாயில்களையும் காத்துவந்தார்கள்.

சந்நியாசி சந்திப்பு

விஷயம் இங்ஙனம் இருந்து வருகையில் அரசிளங் குமரர், ஒருநாள் பூங்காவனத்திற்குச் சென்றார். செல்லும் வழியில் அவர், காவி உடை தரித்துக் கொண்டு, ஒரு கையிற் கமண்டலமும், மற்றொரு கையில் திருவோடும் ஏந்தி, வீடுகள் தோறும் சென்று, பிச்சை யெடுத்துக்கொண்டிருந்த சந்நியாசி ஒருவரைக் கண்டார்.

அச் சந்நியாசியின் முகம் பொலிவுற்று விளங்கியதைக்கண்ட அரசிளங் குமரர், ஆச்சரியமடைந்த

வராய்ச் சாரதியை நோக்கி விஷயம் யாதென வினவினர்.

அதற்கு விடையாகச் சாரதி, இவ்வுலகில் எப் பொருளும் நிலைத்து இருக்கவில்லை யென்றும், எல்லாம் தோன்றித் தோன்றி அழிந்து கொண்டே போகின்றன வென்றும், இந்த உலகத்தின் நிலை யாமையைக் கண்டே அந்தச் சந்நியாசி பலவற்றை யும் துறந்து பிச்சை யெடுத்து உண்டு வருகின்றார் என்றும் தெரிவித்தான்.

சாரதி கூறியவைகளைச் செவியுற்ற அரசிளங் குமரர், அந்தச் சந்நியாசியைச் சமீபித்து, அவரி டத்தில் தமக்கு இருந்த ஐயப்பாடுகள் பலவற்றை யும் தெரிவித்துக் கொண்டார்.

அந்தச் சந்நியாசி, 'செய்வது சிவபூஜை; இடிப்பது சிவன்கோயில், ஓதுவது வேதாந்தம்; கவர்வது பிறர் சொத்து,' என்னும் பழமொழி களுக் கேற்ப, நடக்கும் சந்நியாசிகளைப் போன்ற வர் அல்லர். ஆகவே, அவர் சித்தார்த்தருடைய பரிபக்குவ நிலையை உணர்ந்து, அவருடைய ஐயப் பாடுகள் யாவற்றையும் நன்கு எடுத்து விளக்கினர்.

ஆழ்ந்த சிந்தனை

அந்தச் சந்நியாசியைக் கண்டு உரையாடிய பிறகு, சித்தார்த்தருக்கு என்று மில்லாத மன மகிழ்ச்சி உண்டாயிற்று. உண்டாகவே, அவர்

அரண்மனையைச் சேர்ந்த பூங்காவனத்திற்குச் சென்று, அங்கிருந்த ஒரு கல்லின்மீது படுத்துக் கொண்டு, பற்பல விதமான விஷயங்களைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரஞ் சென்றபிறகு, அவர் அரண்மனைக்குச் சென்று அதிக சந்தோஷத்துடன் இருந்து வந்தார். அவர் என்றைக்கும் இல்லாத சந்தோஷத்துடன் இருந்ததைக் கண்டார் அனைவரும் மனம் பூரித்தனர்.

புத்திரப் பேறு

அன்று சித்தார்த்தர் இங்ஙனம் இருந்து கொண்டு இருக்கையில், அரண்மனையைச் சேர்ந்த தாதி ஒருத்தி 'யசோதரை ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்,' என்று சித்தார்த்தரிடம் தெரிவித்தாள்.

அச் சந்தோஷச் செய்தியினைச் செவியுற்ற சித்தார்த்தர், அதற்காக ஆனந்தங் கொள்ளாது, 'குழந்தை தம்முடைய எண்ணங்களுக்கு ஓர் இடையூறாகப் பிறந்திருக்கிறது' என்று கூறினர்.

சித்தார்த்தர் இங்ஙனம் கூறினர் என்பதைக் கேட்ட அரசர், அக் குழந்தைக்கு, 'இடையூறு உண்டாக்குகிறவன்' என்னும் பொருள்பட, 'இராகுலன்,' என்ற நாமத்தைச் சூட்டினர்.

அரசருக்குப் பேரன் பிறந்தான் என்ற நற்செய்தி நகரெங்கும் காட்டுத் தீயேபோன்று பரவியது. பரவவே, நகரமாந்தர்கள் எல்லோரும் ஆனந்தக் கூத்தாடினார்கள். சுத்தோதனரும் பேரன் பிறந்தமைக்குப் பெரிதும் சந்தோஷித்தார்.

சித்தார்த்தரோ குழந்தை தம்முடைய எண்ணங்கள் பலவற்றுக்கும் ஓர் இடையூருகவே உளது எனக் கருதி வந்தார்.

துறவு

எங்கும் சப்தமற்று இருந்தது. சித்தார்த்தர் மாத்திரம் அன்று இரவு தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தார். இரவு பன்னிரண்டு மணியாயிற்று. சித்தார்த்தர், தம் படுக்கையை விட்டு எழுந்திருந்து சாரதியை எழுப்பி, இரதத்தைத் தயாரிக்குமாறு கட்டளையிட்டார்.

சாரதியும் மறுவார்த்தை ஒன்றும் மொழியாது இரதத்தைத் தயாரித்துக்கொண்டு வந்து நிறுத்தினான்.

சித்தார்த்தர், அதில் அமர்ந்துகொள்ளுமுன் தம் மனைவியையும், குழந்தையையும் கடைசியாகப் பார்த்து விட்டுச் செல்லலாம் என்று எண்ணினார். ஆனால், அவ்வாறு தாம் செய்வது தாம் எண்ணியுள்ள எண்ணத்திற்குப் பாதகத்தை உண்டாக்கக் கூடுமென்று கருதி, அவ்விதம் செய்யாது இரதத்

தில் அமர்ந்து கொண்டார். சாரதி இரதத்தைச் செலுத்திக் கொண்டு சென்ருன்.

சித்தார்த்தரும், சாரதியும் நகரத்தின் வாயிலைக்கடக்கும் சமயத்தில் மாயையானவள், அழகிய ஒரு பெண் உருவம் தாங்கியவளாய் அவர் முன் தோன்றி, அவரை அவரது எண்ணத்தினின்றும் நீக்கவேண்டிய முயற்சிகள் பலவற்றையும் செய்து பார்த்தாள்.

கருமமே கண்ணுயினர், எதையும் பொருட் படுத்த மாட்டார்க ளாகையினல், சித்தார்த்தர் தாம் மேற்கொண்ட கருமத்தைச் சாதிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தாரே யல்லது, அவர் மாயையின் மாயவலைக்குள் சிக்கிக் கொள்ளுகின் றவராய்க் காணப்படவில்லை.

என்ருலும், மாயையானவள் அவரைக் கெடுப் பதற்குத் தகுதியான சந்தர்ப்பம் கிடைக்கும் என்று எண்ணி, நிழலைப்போல அவரைப் பின் தொடர்ந்து செல்லலானுள்.

அரசர் நகரின் பல வாயில்களிலும் தகுதி யான காவல் வைத்திருந்தும், அக் காவல்களெல் லாம் தேவர்களின் எண்ணத்துக்கு முன் பயனற் றுப் போயின. ஆகவே சித்தார்த்தர், கஷ்டம் ஒரு சிறிதும் இன்றி நகரவாயிலைக் கடந்து விட்டார்.

சித்தார்த்தரும், சாரதியும் அன்று இரவு முழுவதும் மிகச் சிரமத்தோடு பிரயாணஞ் செய்தனர். சந்திரன் மறைய ஆரம்பித்தது. கிழக்குத் திசை வெளுக்க ஆரம்பித்தது. உடனே சித்தார்த்தர், இரதத்திலிருந்து கீழே இறங்கித் தாம் அணிந்திருந்த ஆடை அணிகள் யாவற்றையும் சாரதியிடம் களைந்து கொடுத்து, அவனை நகருக்குத் திரும்பிச் செல்லும்படி உத்தரவளித்தார்.

முதலில் சாரதி அதற்கு இணங்காமல் தானும் சித்தார்த்தருடன் இருந்து விடுவதாகச் சொன்ஞன். உடனே சித்தார்த்தர், தம்மைப் பற்றிய விஷயங்கள் சுத்தோதனருக்குத் தெரிய வேண்டுமென்றும், ஆகவே சாரதி நாட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டியது அவசியமென்றும் கூறிஞர்.

சித்தார்த்தர் கூறிய விஷயங்கள் முறையானவை என்று சாரதிக்குப் படவே, அவன் சித்தார்த்தரைத் தனியே விட்டு நகருக்குத் திரும்பிப் போய், நடந்த விஷயங்களைச் சுத்தோதனருக்கு ஆதியோடந்தமாக எடுத்துக் கூறிச் சித்தார்த்தர் தம்மிடம் கொடுத்தனுப்பிய ஆடைகளையும், பிறவற்றையும் அவரிடம் கொடுத்தான்.

நான்காம் அத்தியாயம்

சித்தார்த்தர் உண்மையை நாடிப் புத்தராதல்

சந்நியாசிக் கோலத்துடன் மகத ராஜ்யம் செல்லல்

இந்திரனும் நாணத்தக்க இராஜபோகங்கள் பல வற்றையும் ஒரு நொடிப் பொழுதில் விட்டொழித்துச் சித்தார்த்தர், தமது தலையை மொட்டையடித்துக் கொண்டு, காஷாயவஸ்திரம் தரித்துக் கையில் திரு ஓடு தாங்கிய முனிவரானார். இவரைச் சாக்கிய முனிவர் என்று அழைப்பது வழக்கம்.

சாக்கிய இராஜ்ஜியத்திலேயே இருந்து கொண்டிருந்தால், தம்முடைய எண்ணம் நிறைவேறாது என்பதை உணர்ந்த சாக்கியமுனிவர், கங்கை நதியைக் கடந்து மகத இராஜ்ஜியத்தின் தலை நகராகிய இராஜக் கிருகம் என்னும் பட்டணத்தை அடைந்தார்.

அக்காலத்தில், மகத இராஜ்ஜியத்தைப் பிம்பிசாரன் என்னும் ஓர் அரசன் ஆண்டு வந்தான்.

பிச்சை ஏற்றல்

சித்தார்த்தர், தினந்தோறும் கையில் திருவோட்டை ஏந்தி, வீடுகள் தோறும் சென்று பிச்சை எடுத்து உண்டு வந்தார்.

ஒரு நாள் சித்தார்த்தர், திருவோட்டைக் கையில் ஏந்திப் பிச்சைக்காகச் சென்று கொண்டிருக்கையில், அரண்மனையின் மேல் மாடியில் உலவிக்கொண்டிருந்த அரசன், சித்தார்த்தருடைய முகப்பொலிவைக் கண்டு, அவரைப் பற்றிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று பெரிதும் அவாவுற்றான். அவாவுற்ற அவ்வரசன், தன்னுடைய வேலையாட்களைக் கூப்பிட்டுச் சித்தார்த்தரைச் சுட்டிக் காட்டி, அவர் இருப்பிடத்தைத் தெரிந்து வந்து தனக்குச் சொல்லும்படி கட்டளை யிட்டான்.

மன்னவனுடைய கட்டளையைச் சிரமேற்றாங்கி அவ்வேலையாட்கள், சித்தார்த்தரைத் தொடர்ந்து சென்று, அவர் இருப்பிடத்தைக் கண்டு பிடித்து வந்து அரசனிடம் தெரிவித்தார்கள்.

அதன்பிறகு அரசன், சித்தார்த்தருடைய இருப்பிடத்திற்கு வந்து, அவருக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் செய்து கொடுப்பதாகச் சொன்னான்.

அரசன் கூறியவைகளைச் செவியுற்ற சித்தார்த்தர், அரசனை நோக்கி, 'வேந்தே, நானும் தங்களைப் போலவே அரச குடும்பத்தில் தோன்றியவன் ஆவேன். ஜனங்களுடைய கஷ்டங்களைக் களைந்து, அவர்கட்குச் சௌக்கியத்தை உண்டு

பண்ணுவதற்காகவே, நான் இராஜ போகங்களை யெல்லாம் துறந்து சந்நியாசியாய் இருக்கின்றேன்,' என்று தெரிவித்தார்.

சித்தார்த்தர் இங்ஙனம் கூறியவைகளைச் செவியுற்ற அரசன், அவரை வணங்கி, 'ஐயரே! தாங்கள் எந்த உண்மையைக் கண்டுபிடிப்பதற்காகப் பாடுபடுகின்றீர்களோ, அந்த உண்மை தங்களுக்கு உதயமானால், அதை எமக்கும் எடுத்துரைக்கப் பிரார்த்திக்கின்றேன்,' என்று விண்ணப்பித்துக் கொண்டான். சித்தார்த்தரும் அதற்கு இசைந்தார்.

ஆராய்ச்சி

சித்தார்த்தர், தமக்குக் கிடைத்தவைகளைச் சாப்பிட்டுக்கொண்டு, இராஜக் கிருகத்தைச் சேர்ந்த மலைகளில் இருந்து அநேக விஷயங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்துகொண் டிருந்தார்.

குருவை யடைதல்

இராஜக் கிருகத்தில் 'அலா ரா கலாமா' என்னும் ஓர் இந்து சந்நியாசி வசித்துக்கொண் டிருந்தார். அவர், சாஸ்திரங்கள் யாவற்றையும் ஐயம் திரிபறக் கற்று அவைகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். அவரைச் சித்தார்த்தர் அடைந்து, 'குருவே! என்னையும் தங்களுடைய சிஷ்யர்களில் ஒருவனைச் சேர்த்துக்கொள்ளும்,' என்று வேண்டிக் கொண்டார்.

அதற்கிணங்க அந்தக் குருவும் சித்தார்த்தரைத் தம்முடைய சீடர்களில் ஒருவராகச் சேர்த்துக் கொண்டார். அவரிடத்தில் சித்தார்த்தர் சிறிது காலம் இருந்து வந்தார். அவரது உபதேசங்கள் சித்தார்த்தருக்குப் பிடிக்க வில்லை. ஆகவே, அவர் அந்தக் குருவை விட்டு வேறொரு குருவை நாடினார். அந்தக் குருவின் பெயர் 'உதகன்' என்பதாகும்.

அவர் கூறியவைகளும் சித்தார்த்தருக்குப் பிடிக்கவில்லை. ஆதலால், அவர் அந்தக் குருவையும் விட்டுவிட்டுத் தாமே உண்மையை நாட ஆரம்பித்தார்.

தவம் புரிதல்

சித்தார்த்தர், இராஜக் கிருகத்தை விட்டு 'உருவேலா' என்னும் வனங்களுக்குச் சென்று, அங்கே இருந்து கொண்டு தாம் கோரியவைகளின் உண்மைகளைக் கண்டு பிடிக்க முயன்றார். சித்தார்த்தர் பட்டினி கிடந்தும், தவமிருந்தும் தம் காலத்தைக் கழித்து வந்தார்.

ஐந்து சந்நியாசிகள் சந்திப்பு

இங்ஙனம் சித்தார்த்தர் இருந்து வருகையில், அந்தக் கானகத்தில் வசித்துக் கொண்டிருந்த ஐந்து சந்நியாசிகள், சித்தார்த்தர் செய்யும் தவத்தைக்

கண்டு மெச்சி, அவருடன் கூடவே இருந்து வந்தார்கள்.

சித்தார்த்தர், ஒரு வருஷம் அன்று; இரண்டு வருஷமன்று; ஆறு வருஷங்கள் வரை அந்தக் காட்டிலேயே உறைந்து தவஞ் செய்து வந்தார் ஆனால், அவர் நாடிய உண்மை அவருக்குப் புலனாக வில்லை. இக்கடுமையான தவம் காரணமாக, அவர் எலும்பும் தோலுமாகக் காணப்பட்டார். அவரை ஒருவரும் அடையாளம் கண்டு பிடிக்கக் கூட வில்லை.

பட்டினி தவிர்த்தல்

அவரது தேகம் மிகவும் மெலிந்து போய் இருந்தபடியால், அவர் ஒருநாள் காட்டில் நடந்து சென்றுகொண் டிருக்கையில் கீழே விழுந்து விட்டார். எனவே, சித்தார்த்தர், பட்டினியும் விரதமும் இருந்து, உடம்பை எலும்பும் தோலுமாக ஆக்கிக் கொள்ளுவதனால், பிரயோசனம் ஒன்றும் ஏற்படா தென்று கருதிப் பட்டினியையும், விரதத்தையும் விட்டொழித்து, முன் போலவே ஆகாரம் உட்கொள்ள ஆரம்பித்தார்.

அவரோடு இருந்து வந்த ஐந்து சந்நியாசிகளும் அவரது செய்கையைக் கண்ணுற்றார்கள். சாதாரண மனிதனைப் போல ஆகாரம் உட்கொள்ளும் ஒரு மனிதனால், மோட்ச மார்க்கத்தைக் கண்டு

பிடிக்க முடியாதென்று கருதிய அவ்வைவரும், சித்தார்த்தரைத் தனியே விட்டுச் சென்று விட்டார்கள்.

சித்தார்த்தரோ எதற்கும் சலியாது தம் காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்து வந்தார்.

சுஜாதா பிரார்த்தனை

உருவேலா காட்டிற்குச் சமீபத்தில், 'சேனானி' என்னும் ஒரு கிராமம் இருந்தது. அக் கிராமம் 'பல்குனி' நதிக்கரையில் கட்டப்பட்டிருந்தது. அந்தக் கிராமத்தைச் சேர்ந்த கிராம அதிகாரிக்கு ஒரு குமாரத்தி இருந்தாள். அவள் பெயர் 'சுஜாதா' என்பதாகும். அவள், சிறுமியாய் இருந்தபோது தனக்கு நல்ல கணவன் ஏற்பட வேண்டும் என்றும், தனக்குப் பிறக்கும் முதல் குழந்தை ஆணாய் இருக்க வேண்டும் என்றும், அங்ஙனம் நடைபெற்றால் பூசைசெய்கிறேன் என்றும், ஒரு மரத்தில் வசித்துக் கொண்டிருந்த கடவுளிடத்துப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

அவளுடைய பிரார்த்தனைக் கேற்ப, அவளுக்குக் காலக்கிரமத்தில் கலியாணம் நடந்து ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது. எனவே, அப்பெண் ஒரு நாள் ஒரு பாத்திரம் நிறையப் பாலை எடுத்துக் கொண்டு தான் பிரார்த்தித்துக் கொண்ட மரத்தினிடம் செல்ல ஆரம்பித்தாள்.

சித்தார்த்தர் அந்த மரத்தின் அடியில் உட்கார்ந்து தவஞ் செய்து கொண்டிருந்தார். அவரைத் தூரத்திலேயே கண்ட அப்பெண்மணி, தான் கோரிய தெய்வம் தன்னுடைய பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ள எண்ணி, அம்மரத்தின் அடியில் அமர்ந்துளது என்று நினைத்து, மிகவும் உவகை பூத்துத் தான் கொண்டுபோன பாலைப் பாத்திரத்துடன் அவ்விடத்தில் வைத்து, வீட்டிற்குத் திரும்பி வந்து விட்டாள்.

பால் பருகுதல்

அவள் சென்று வெகுநேரம் கழித்துச் சித்தார்த்தர் விழித்துக்கொண்டார். தம் எதிரில் ஒரு பாத்திரத்தில் பால் இருக்கக் கண்டு, அவர் அதை எடுத்து ஆவலுடன் பருகி ஆயாசம் தீர்ந்தார்.

மாயையின் வசப்படல்

வருஷங்கள் பல கழிந்தும் தாம் கோரிய காரியம் நிறைவேறாதிருந்ததைக் கண்ட சித்தார்த்தர், மிகவும் மனம் வருந்திச் சிற்சில சமயங்களில் மனைவி மக்களையும், உற்றார் உறவினரையும் நினைக்க ஆரம்பித்தார்.

அவருடன் கூடவே நிழலைப்போன்று பின் தொடர்ந்து கொண்டு வந்த மாயை, அதுவே தக்க தருணம் என்று சந்தோஷித்து அவர் மேற்கொண்

டிருந்த விரதத்தினின்றும் அவரை நீக்கிவிடத் தன்னுலான முயற்சிகளைச் செய்த வண்ண மிருந்தாள்.

தவம்புரிதல், மாயை விலகல்

சுஜாதா என்னும் பெண் வைத்துச்சென்ற பாலைக் குடித்த அதே தினம், சாயந்திர வேளையில், சித்தார்த்தர், தம் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, பல்குனி நதிக் கரையின் மீது வளர்ந் திருந்த ஒரு போதி விருட்சத்தின் அடியில் சென்று உட்கார்ந்துகொண்டு, கடுமையாகத் தவஞ்செய்ய ஆரம்பித்தார்.

அதைக் கண்ணுற்ற மாயை, அவரைப் பல விதத்திலும் மயக்கி, அவரது புத்தியைக் கெடுத்து விடப் பார்த்தாள். என்றாலும் சித்தார்த்தர், அவளது சேஷ்டைகளைப் பொருட் படுத்தாது, தமது காரியத்தின் மீதே அதிக நோக்கங் கொண் டவராய் இருந்தார். அதைக் கண்ட மாயை, பொழுது விடியும் சமயத்தில் தனது எண்ணம் பலி யாததைக் கண்டு வருத்தமுற்றுத் தான் வந்த வழியே தன் கூட்டத்துடன் திரும்பிச் சென்றாள்.

ஞானேதயம்

சித்தார்த்தருக்கு ஞானேதயம் உண்டாயிற்று. அதைக் கண்ட தேவர்கள் பலரும் சந்தோஷித் தார்கள். சித்தார்த்தருக்கு என்றுமில்லாத முகப்

பொலிவு ஏற்படத் தொடங்கியது. ஞானம் கைகூடி விட்டதை அறிந்த சித்தார்த்தர் மிகவும் உவகை உற்றனர். அன்று முதற்கொண்டு அவர் 'புத்தர்' என்னும் நாமத்தைப் பெற்ருர்.

புத்தர், ஏதோ ஒரு சக்தி உலகத்தை ஆட்டிப் படைக்கிறதென்றும், அதன் வழியே ஜனங்கள் இவ்வுலகில் உழன்று வருகின்றன ரென்றும், காரணம் ஏதும் இல்லாது எந்த ஒரு காரியமும் நடைபெருதென்றும், உலகமே காரண காரியங் களால் ஆக்கப்பட்டிருக்கிற தென்றும், நன்மை செய்கிறவன் நன்மையை அடைகிருன் என்றும், தீமை செய்கிறவன் துன்பத்தை அனுபவிக்கிருன் என்றும், மனிதன் பிறப்பையும் இறப்பையும் ஒழிக்க வேண்டுமானல், நன்மையான காரியங் களையே செய்துகொண்டு வருதல் வேண்டுமென் றும், இங்ஙனம், ஜன்மந்தோறும் செய்து கொண்டு வருகிற புண்ணியத்தின் மிகுதியால், மனிதன் இறு தியில் பிறப்பு இறப்பு ஒழிந்த ஓர் ஒப்பற்ற நிலையை யடைகிருன் என்றும், அந்த நிலையே மோட்சம் அல்லது நிர்வாணம் எனப்படும் என்றும் அறிந்து கொண்டார்.

ஞானம் பிறர்க்குப் போதித்தல்

இந்த ஞானம் அவருக்குப் போதி விருட்சத் தின் அடியில் உண்டானதின் நிமித்தம் அவர், அந்த மரத்தை விட்டுச்செல்ல விரும்பிஞரன்று. ஏழு

நாட்கள் வரையில் அவர், அந்த மரத்தின் அடியிலேயே அமர்ந்து கொண்டு, தாம் கண்டு பிடித்த உண்மையைத் தம் மனத்திலேயே வைத்துக் கொள்ளுவதா, அல்லது மற்ற ஜனங்களுக்கும் எடுத்துரைத்து அவர்களையும் மோட்சத்தை அடையுமாறு செய்வதா என்பதைப்பற்றியும், மற்றுமுள்ள விஷயங்களைக் குறித்தும் பரிசீலனை செய்து கொண்டேயிருந்தார்.

கடைசியில், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்,' என்பதற்கிணங்க அவர், தாம் கண்டு பிடித்த உண்மையினை ஜனங்களுக்கு எடுத்துரைத்து, அவர்களையும் மோட்சம் அடையுமாறு செய்வதே சரியென்று எண்ணினார். இங்ஙனம் கருதிய அவர், தாம் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு வெளியேறித் தாம் கண்ட உண்மைகளை ஜனங்களுக்கு எடுத்துப் போதிக்க அவாவினார்.

தமக்கு முதன் முதலில் ஏற்பட்ட குருக்களான அலாரா காலாமாவுக்கும், உதகருக்கும் தாம் கண்டு பிடித்த உண்மையை எடுத்துக்கூற எண்ணிப் புத்தர் அவர்களை நாடிச் சென்றார். ஆனால், அவ்விருவரும் அதற்கு முன்னரே காலமாய் விட்டார்கள். ஆகவே, அவர் தம்முடன் கானகத்தில் இருந்து, தவம் செய்து கொண்டிருந்த ஐந்து முனிவர்களிடத்திலும், தாம் கண்டு பிடித்த

உண்மையை எடுத்துக்கூற வேண்டுமென்று கருதியவராய்க் காசியை நோக்கிச் சென்றார்.

அங்கே அந்த முனிவர்கள் இருக்கக்கண்டார். முதலில் அந்த முனிவர்கள், புத்தரைக்கண்டு அவரை ஏளனஞ் செய்ய ஆரம்பித்தார்கள். அதோடு நின்றுவிடாமல் அவரை அவர்கள் அகௌரவித்தும் வந்தார்கள்.

ஆனால் புத்தர், அவர்களது தூற்றுதலை ஒரு பொருட்டாக மதியாது அவர்களுக்குத் தாம் கண்ட உண்மையை எடுத்துரைத்தார்.

அவர் எடுத்துரைத்தவைகளைச் செவியுற்ற அந்த இரிஷிகள், அவரை அகௌரவித்ததற்காக மிகவும் வருந்தி, அவர் பாதங்களில் வீழ்ந்து தாங்கள் அறியாமல் செய்த குற்றங்களை ஒரு பொருளாக மதியாது, தங்களை மன்னிக்கவேண்டுமென்று மிகவும் இறைஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள்.

புத்தர் அன்பே உருவானவர் அன்றோ? அவர், அவர்களை மன்னித்து அவர்களுக்குத் தம் கருத்துக்கள் பலவற்றையும் வெள்ளிடை மலை போல விளங்க எடுத்துரைத்தார்.

புத்தர், தம் சீடர்களை நோக்கித் தாம் ஜனங்களுக்கு நீதிமார்க்கங்களைப் போதிப்பதற்காகவே வந்து உதித்ததாகவும், தாம் தமது விரதங்களாலும் தவங்களாலும் அறிந்து கொண்டவை

நான்கு விஷயங்களாகுமென்றும், அந்த நான்கு விஷயங்களையும் தம் சீடர்கள் கட்டாயமாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும் மொழிந்தார்.

1. உலகம் நிலைபெற்று விளங்கும் வரை சுகதுக்கங்கள் இருந்தே தீரும்.

2. நிலையற்றவையான உலகப் பொருட்களின் மீது ஆசை வைப்பதனுற்றுன் மானிடர்களுக்குத் துன்பம் உண்டாகின்றன. ஆசையற்ற மனிதனுக்கு அனைத்தும் இன்பமாகவே தோன்றுகின்றன. இச் சந்தர்ப்பத்தில் 'ஆசை அறுமின் ஆசை அறுமின்' என்ற பெரியோர் திருவாக்கு நோக்கத்தக்கது.

3. மனிதன் ஜீவாத்மாவுக்கு அடிமைப்படாது, தன்னுள் இருக்கும் பரமாத்மாவுடன் ஒன்ருய்க் கலக்கப் பாடுபடுதல் வேண்டும். இங்ஙனம் பாடுபடின், மனிதன் உலக பந்தங்களினின்றும் நீங்கி நிச்சயமாகச் சுகம் பெறுவான்.

இங்ஙனம் மனிதன் நடந்து கொண்டால் அவன் இறுதியில் பிறப்பு இறப்பு என்னும் பந்தங்களினின்றும் நீங்கி, நிர்வாணம் என்னும் மோக்ஷ மார்க்கத்தைக் கட்டாயம் அடைவான்.

மனிதன் உலக பந்தங்களினின்றும் நீங்குவதற்குச் சில விதிகளை அனுசரிக்க வேண்டுமென்றும், அவ்விதிகளை அனுசரிக்கின் மனிதன்

ஐயமின்றி மோட்சத்தை அடைவான் என்றும் அவர் கூறியுள்ளார்.

நீதி போதம்

அவ்விதிகளாவன:—

1. ஒவ்வொரு விஷயத்திலும் உண்மையான நம்பிக்கையைக் கொள்ளுதல் வேண்டும்.

2. மேலான எண்ணங்களும் நோக்கங்களும் ஏற்படுதல் வேண்டும்.

3. கீழோர் ஆயினும் அவரிடத்துத் தாழ்மையாக உரையாடுதல் வேண்டும். தான் என்ற கர்வம் கொள்ளுதல் அடாது.

4. புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் பொருட்படுத்தாத குணத்தைக் கொள்ளுதல் வேண்டும்.

5. உலகில் சன்மார்க்கத் தொழிலை மேற்கொண்டு சீவனஞ் செய்து வருதல் வேண்டும்.

6. பிறருக்கு நன்மை செய்வதில் தளராவூக்கங் காட்டவேண்டும். இவ்விடத்து, 'திங்கள் கறை இருளை நீக்கக் கருதாதுலகில் நிறை இருளை நீக்குமேல் நின்று,' என்னும் வாக்கியம் கவனிக்கற்பாலது.

7. புத்தியை நல்லவழியில் உபயோகித்து, ஜனங்களுக்கு நன்மை செய்ய முயலுதல் வேண்டும்.

8. தகுதியான வழியில் நினைவைச் செலுத்துதல் வேண்டும்.

புத்தர் இந்த உண்மைகளைத் தம் சீடர்களுக்குப் பிரசங்கித்ததுடன் வாளாவிருந்துவிடாது ஜனங்களுக்கும் பிரசங்கிக்க முற்பட்டார்.

சீடர்கள் வந்தடைதல்

யாசன் என்ற பணக்காரர் ஒருவர் இருந்தார். அவர் புத்தர் போதித்த போதனைகளைக் கேட்டுத் தம்முடைய சொத்துக்கள் பலவற்றையும் தானதருமங்களில் செலவழித்து விட்டுப் புத்தரைப்போலவே சந்நியாசி யானார். முதன் முதலில் புத்தருடைய கொள்கைகளை மேற்கொண்டவர் இவர் ஒருவரேயாவர்.

புத்தர், காசியிலேயே இருந்து கொண்டு, தம் கொள்கைகளைத் தினந்தோறும் ஜனங்களுக்கு எடுத்துக் கூறி நாட்களைக் கழித்து வந்தார். அவர், காசியில் இருந்து பிரசங்கம் செய்து கொண்டிருந்த மூன்று மாதத்திற்குள், சுமார் அறுபது பேர் அவர் கண்ட உண்மையினை மேற்கொண்டு, அவரிடத்து அன்புகொண்டு அவருக்குச் சீடராயினர்.

சீடர்கள் புறப்படுதல்

பின்னர் புத்தர், அவர்களைத் தம்மிடத்தழைத்து, தாம் கண்டுபிடித்த உண்மைகளைக் கிராமங்

கள் தோறும் சென்று, ஜனங்களுக்கு எடுத்து ரைக்க வேண்டுமென்று கட்டளையிட்டார். அவர்கள், புத்தருடைய கட்டளையின்படியே அநேக கிராமங்களுக்குச் சென்று, அவருடைய உபதேசத்தை ஜனங்களுக்கு எடுத்துரைத்து வந்தார்கள்.

புத்தர், தமது சீடர்களைப் பல பக்கங்களிலும் அனுப்பிவிட்டுத் தாம் மாத்திரம் தன்னந் தனியராய்ச் சென்றுகொண் டிருந்தார். இவ்வாறு அவர், சென்றுகொண்டிருக்கும் சமயத்தில் 'உருவேலா' காட்டைச் சேர்ந்த பிரதேசத்தில் 'காசப்பர்' என்னும் பெயரினைக் கொண்ட மூன்று சகோதரர்களைக் கண்டு, அவர்களுடன் தர்க்கித்து, அவர்களையும் தம் மதத்தில் சேர்ந்துகொள்ளுமாறு செய்தார்.

சித்தார்த்தர் மகத ராஜ்யம் செல்லல்

சித்தார்த்தர், அரச போகத்தை யெல்லாம் துறந்து சந்நியாசியான பின்னர், முதன் முதலாக வந்த நகரம், மகத இராஜ்ஜியத்தின் தலைநகராகிய இராஜக் கிருகம் என்பதாகும். அவர் இராஜக் கிருகத்தில் இருந்தபோது, அந்நாட்டு அரசனாகிய பிம்பிசார மகாராஜன், அவரைக் கண்டு அவருடன் வார்த்தையாடியதும், அவர் தமக்கு உண்மை புலப்பட்டவுடன், அதை அவனுக்குத் தெரிவிப்பதாக வாக்குத் தத்தஞ் செய்ததும் நம் வாசகர்கள் ஞாபகத்தி லிருக்கலாம்.

அந்த வாக்குறுதியை நிறைவேற்ற எண்ணங் கொண்ட புத்தர், இராஜக் கிருகத்துக்கு வந்து சேர்ந்தார். அவரது வருகையை அரசன் தன் தூதர்கள் மூலம் உணர்ந்தான். அதன் பிறகு அரசன், புத்தர் தங்கியிருந்த பனந்தோப்பை யடைந்து, ஆங்கு அவரைக் கண்டு, அவரது பாதங் களில் வீழ்ந்து நமஸ்கரித்தான். புத்தர் அவனை ஆசீர்வதித்தார். பின்னர் அவர், தாம் கண்ட உண் மைகளை அவ்வரசனுக்கு எடுத்துரைத்தார். புத்த ரது போதனைகளைச் செவியுற்ற தினமுதல் பிம் பிசார மகாராஜன் அவருக்குச் சீடனாயிருக்கத் தலைப்பட்டான்.

பிம்பிசார மகாராஜன், புத்தருக்கு மூங்கில் வனச் சோலை ஒன்றைத் தானமாகக் கொடுத்தான். புத்தர், அச் சோலையில் சிறிது காலம் தங்கியிருந்து, தம்முடைய கொள்கைகளை ஜனங்களுக்கு எடுத் துரைத்துக் கொண்டு வந்தார்.

அரசன் எந்த வழியில் செல்லுகிறானோ அவ் வழியில் குடிகளும் செல்வார்கள் அன்றோ? அர சன் புத்தருடைய சிஷ்யனாகிவிடவே, அவனுடைய குடிகளில் பெரும் பகுதியினர் புத்தரின் கொள்கை களைத் தழுவ ஆரம்பித்தனர்.

பிம்பிசார மகாராஜனால் பரிசாக அளிக்கப் பட்ட மூங்கில் வனச் சோலையில் புத்தர் உறைந்து கொண்டிருக்கையில், முன்னர் அவரால் தமது

உபதேசங்களைப் பரப்புமாறு வெளியூர்களுக்கு அனுப்பப்பட்ட அவருடைய சீடர்கள் திரும்பி வந்தார்கள்.

புத்தர், இராஜக்கிருகத்தில் இருந்துகொண்டிருக்கையில், சரிபுத்தன், மோகலானன் என்னும் பெயரினைக் கொண்ட இரண்டு மனிதர்கள் அவருடைய சீடர்களானார்கள். அவர்கள் இருவரும், புத்தருக்கு வலது கையைப் போலவும், இடது கையைப் போலவும் இருந்து வந்தார்கள். அவர்களிடத்தில் புத்தர் அத்தியந்த விசுவாசமும் அன்பும் காட்டிக்கொண்டிருந்தார்.

ஐந்தாம் அத்தியாயம்

சுத்தோதனரும் புத்தரும்

சுத்தோதனர் புத்தரைப் பற்றி விசாரித்தல்

சாரதியின் மூலமாகச் சித்தார்த்தரைப் பற்றிய விஷயங்களை அறிந்த சுத்தோதனர், தமது எண்ணங்கள் பலிக்காமற் போய்விட்டனவே யென்று மிகவும் மனவாட்டமுற்றூர். பின்னர் அவர் ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, தமது ஒற்றர்கள் மூலமாகச் சித்தார்த்தரைப் பற்றிய விஷயங்கள் பலவற்றையும் உணர்ந்து வந்தார்.

சுத்தோதனர் வருத்த மடைதல்

புத்தர், ஞானம் கைகூடப்பெற்று மன்பதையினருக்கு உபதேசஞ் செய்துகொண்டு வருவதை ஒற்றர்களின் மூலமாய் அறிந்த சுத்தோதனர், அவரை அழைத்துக்கொண்டு வருமாறு அநேகம் பிரமுகர்களை அனுப்பினர். அவர்களில் ஒருவரேனும் மறுபடியும் கபிலவஸ்து நகரத்துக்குத் திரும்பி வந்தபாடில்லை. அவர்கள் புத்தரைப்பற்றிய விஷயங்களைத் தூதர்கள் மூலமாய் அரசருக்குச் சொல்லி அனுப்பவும் இல்லை. ஆகவே சுத்தோதனர் மிகவும் மனம் உடைந்து, இன்னது செய்வதெனத் தோன்ருது திகைத்துக் கொண்டிருந்தார். கடைசியில் அரசருக்குப் புத்தருடைய

பால்ய சிநேகனுகிய கால உதயன் என்பவனின் ஞாபகம் வந்தது.

கால உதயனிடம் தெரிவித்தல்

சுத்தோதனர், உடனே அவனிடம் சென்று தம் உள்ளக் கருத்தைத் தெரிவித்தார். அரசன் சொற்களைக் கேட்ட கால உதயன், தன்னுல் கூடுமான வரையில் பிரயத்தனஞ் செய்து புத்தரை அழைத்துக்கொண்டு வருவதாக வாக்களித்தான். அவன் வாக்குறுதியைச் செவியுற்ற அரசர், ஒரு சிறிது மனம் தேறுதலடைந்து கால உதயனை மகத இராஜ்ஜியத்தின் தலைநகராகிய இராஜக் கிருகத்துக்குப் பயணப்படுத்தி அனுப்பினுர்.

கால உதயன் புத்தரைச் சந்தித்தல்

இராஜக் கிருகத்தை யடைந்த கால உதயன், தனக்கு முன் வந்தவர்கள் அனைவரும் சந்நியாசிகளாகிப் புத்தரைச் சூழ்ந்து கொண்டு அமர்ந்திருந்ததைக் கண்டான். பிறகு அவனும் அவர்களைப் போலவே சந்நியாசியானுன். ஆனுல் அவன், அரசர் தனக்கு இட்ட கட்டளைகளை மறந்தவனன்று. ஆகவே, அவன் அதற்குத் தக்க சமயத்தை எதிர் பார்த்த வண்ண மிருந்தான்.

வசந்த காலம் ஆரம்பித்தது. எங்கும் புஷ்பங்கள் புஷ்பித்து நறுமணத்தை நாலாபக்கங்களிலும் வீசிக்கொண்டிருந்தன. பாடும் புள்ளினங்கள் தம்

இனிய குரலினால் மாந்தர்களுக்கு இன்பத்தை ஊட்டிக் கொண்டிருந்தன. இந்த வைபவங்களைக் கண்ட கால உதயன், அதுதான் தக்க சமயமென்று எண்ணி, அரசர் தன்னிடத்தில் சொல்லி அனுப்பிய செய்தியைப் புத்தரிடத்துப் பக்தி விசுவாசத்துடன் எடுத்துச் சொன்னான்.

புத்தர், கபிலவஸ்து நகரத்துக்குத் திரும்புதல்

கால உதயன் கூறியவைகளைக் கேட்ட புத்தர், அவன் வேண்டுகோளுக்கு இணங்கிக் கபிலவஸ்து நகரத்துக்குப் புறப்படத் தாம் ஆயத்தமாய் இருப்பதாகத் தெரிவித்தார்.

தன் எண்ணம் நிறைவேறு மென வறிந்த கால உதயன், மிகவும் சந்தோஷித்து அச்செய்தியைத் தூதர்கள் மூலமாகச் சுத்தோதனருக்குத் தெரிவித்தான்.

முற்றும் கடந்த ஞானிகளும் தம் மக்கள் மேல் கொண்ட காதலை விடமாட்டார்கள் அன்றோ? அப்படி இருக்கச் சுத்தோதனரைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? தம் குமாரர் வருகிறார் என்ற செய்தி அவரது செவிகளில் எட்டியதும் சுத்தோதனர், கரை கடந்த ஆனந்தங் கொண்டு, தம் குமாரரை வரவேற்பதற்கான ஏற்பாடுகள் யாவற்றையும் செய்து வந்தார்.

சந்நியாசிகள் அரண்மனைகளில் தங்கமாட்டார்களாகையால் அவர்களுக்கென்று ஒரு பெரிய தோட்டத்தில் கூடாரம் முதலியவைகளை ஏற்பாடு செய்யுமாறு மன்னவர் கட்டளையிட்டார். அத்தோட்டத்தில் பிரமாண்டமானதொரு ஆலமரம் இருந்தது. அதன் அடியில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து தங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டன. இங்கு,

> 'தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
> தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
> நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
> அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
> மன்னர்க் கிருக்க நிழலா கும்மே!'

என்னும் அடிகள் கவனிக்கத்தக்கவையாம்.

புத்தர், தமது சீடர்களைப் பிரயாணத்திற்கு ஆயத்தமாயிருக்குமாறு கட்டளையிட்டார். சந்நியாசிகளுக்குத் திருவோட்டைத் தவிர வேறு என்ன செல்வம் இருக்கின்றது? வேறு ஒன்றுமில்லையன்றோ? புத்தர் கட்டளையிட்ட சற்று நேரத்திற்குள் சந்நியாசிகள் பிரயாணத்துக்கு ஆயத்தமாயினர். பின்னர் புத்தர் தமது சிஷ்யர்களுடன் கபிலவஸ்து நகரத்துக்குப் புறப்பட்டு வழிநடக்கலுற்றார். அவரைப் பின்தொடர்ந்து அவரது சிஷ்யர்களும் வழிநடக்கலாயினர்.

தமது நகருக்குச் சமீபமாகப் புத்தர் வந்து கொண்டிருந்ததை அறிந்த அரசரும், மற்றுமுள்

ளோரும் அவரை எதிர்கொண்டு அழைக்க எண்ணி நகரவாயிலிற் காத்துக்கொண் டிருந்தனர்.

புத்தரோ வழுக்கைத் தலையுடனும், காஷாய வஸ்திரத்துடனும், கையில் திருவோட்டைத் தாங்கியவராய் நகரவாயிலை அடைந்தார். அவருக்குப் பின்னால் அவரது சீடர்கள் சென்றனர். அவர்களும் தங்கள் தலைவரைப் போலவே காணப்பட்டார்கள்.

சுத்தோதனர், புத்தரை வரவேற்றல்

சுத்தோதனர், தமது குமாரர் முகத்தில் ஒரு விதமான ஜோதி பிரகாசித்துக்கொண்டிருந்ததைக் கண்டு, தம்மையும் அறியாது தம் புத்திரரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கிப் பின்னர் எழுந்து நின்றனர். அரசரே அங்ஙனம் செய்தாரெனின் மற்றவர்களைப் பற்றி உரைக்கவும் வேண்டுமோ?

சாக்கியர், குலாபிமானத்தில் தலை சிறந்தவராவர். ஒரு சில சாக்கியப் பிரபுக்களுக்கு அரசர் செய்த காரியம் சற்றேனும் பிடிக்கவில்லை. வேறு விதியில்லையே யென்று கருதி அவர்கள் புத்தரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்கள்.

புத்தர் அரசை ஏற்றுக்கொள்ள மறுத்தல்

அரசர், தமது மைந்தரின் காலில் வீழ்ந்து வணங்கினரெனினும், அவருக்குத் தம் குமாரர்

அரசுரிமையை ஏற்றுத் தமது இராஜ்ஜியத்தை ஆளவேண்டும் என்ற எண்ணம் மாத்திரம் இருந்து வந்தது. அவ்வெண்ணத்தை அரசர் சித்தார்த்தருக்குத் தெரிவித்தார். ஆயினும், ஞானம் கைவரப் பெற்றவராகிய புத்தர் தம் தந்தையார் கூறியவிதம் அரசை ஆள இசைந்தாரன்று.

புத்தர் போதனையை அரசர் வெறுத்தல்

புத்தர், தாம் வெகுகாலம் கஷ்டப்பட்டுக் கண்ட உண்மையினை அரசருக்கும் அவரைச் சேர்ந்தோருக்கும் எடுத்துரைத்தார். அவர் எடுத்துரைத்தவை, உலகாயதத்தில் திளைத்துக்கொண்டிருந்தவர்களான அரசர் முதலியவர்களுக்குச் செவிடன் காதில் ஊதிய சங்கைப் போன்று யாதொரு பிரயோசனத்தையும் தரவில்லை. ஆகவே, அவர்கள் புத்தரையும் அவருடைய சிஷ்யர்களையும் பொருட்படுத்தாது வாளாவிருந்து விட்டார்கள்.

அதன்மேல் புத்தரும் அவருடைய சீடர்களும் வற்றாத பாத்திரமாகிய திருவோட்டைக் கையில் தாங்கிக்கொண்டு, கபிலவஸ்து நகரத்தின் தெருக்களில் பிச்சை எடுத்து உண்ண ஆரம்பித்தார்கள்.

தமது குமாரரும் அவரைச் சேர்ந்தோரும் பிச்சை எடுத்து உண்ண ஆரம்பித்ததைக் கண்ட அரசர், மனம் வெதும்பி அரண்மனையை விட்டு வெளியே புறப்பட்டு வந்தார். வெளியே வந்த

அரசர், தம் மைந்தரின் செயலைக் கண்டு மனம் பொறுதவராகித் தம் குமாரரின் கையில் இருந்த திருவோட்டைப் பிடுங்கி எறிந்துவிட்டு, 'நம்முடைய குலத்தின் பெருமையைக் கெடுக்கவோ நீ இங்ஙனம் செய்து வருகின்றனை,' என்று கடுகடுத்துப் பேசினர்.

அரசர் கூறிய கடுமொழிகளுக்காகப் புத்தர் சற்றேனும் வருத்தம் கொள்ளாது அரசரை நோக்கி, 'வேந்தே, நம் குலத்துக்கு மூலகாரணமானவர்கள் பிச்சை எடுத்தே தங்கள் காலத்தைக் கழித்து வந்தார்கள். ஆகவே, அவர்கள் வழித் தோன்றலாகிய யான் பிச்சை எடுத்து உண்பதில் ஓர் ஆச்சரியமும் இல்லை,' என்று அன்பு கனிந்த மொழிகளில் விடை இறுத்தார்.

சித்தார்த்தர் விருந்து உண்ணல்

புத்தர் கூறியவைகளைச் செவியுற்ற அரசர், தம் அறியாமைக்காக வருந்திப் புத்தரையும் அவருடைய சீடர்களையும் அரண்மனைக்கு அழைத்துச் சென்று, உபசரித்து அவர்களுக்கு உணவு முதலானவைகளைக் கொடுத்து அவர்களை மகிழ்வித்தார்.

புத்தர் ஆசி அளித்தல்

புத்தரும் அவருடனிருந்த அவர் சீடர்களும் அமுதுண்ட பின்னர், அவர்களை தரிசிப்பதற்காக அரண்மனையைச் சேர்ந்த ஸ்திரீகள் ஒரு பெருங்

கூட்டமாய் அந்தப்புரத்தை விட்டுச் சபா மண்டபத்திற்குள் வந்து நுழைந்தார்கள். வந்தவர்கள் புத்தரின் பாதாரவிந்தங்களில் வீழ்ந்து சேவித்துக் கொண்டார்கள்.

புத்தர், அவர்களை ஆசீர்வதித்து அவர்களுக்குச் சுகம் ஏற்பட வேண்டுமென்று நன்மொழிகளால் வாழ்த்தினர்.

புத்தர், மனைவியைப் பார்க்கச் செல்லல்

அந்தப்புரத்தைச் சேர்ந்த மாதர்களனைவரும் வந்தார்களென்றாலும் கௌதமருடைய மனைவி மாத்திரம் அக் கூட்டத்தில் காணப்படவில்லை. ஆகவே, புத்தர் அவளது உள்ளக் கருத்தை அறிந்து அவளைப் பார்ப்பதற்காகச் சிஷ்யர்களில் இரண்டு பேரையும், அரண்மனையைச் சேர்ந்தவர்களில் இரண்டு பேரையும் தம்முடன் அழைத்துக் கொண்டு அவளுடைய இருப்பிடத்திற்குச் சென்றார்.

புத்தருடைய காலடிச் சத்தத்தைக் கேட்ட அவர் மனைவி, தன் கணவர்தாம் தன்னைத் தேடிக் கொண்டு வருகிறார் என்று உணர்ந்து, தான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு விரைந்து எழுந்திருந்து, புத்தர் பொற்பாதங்களில் அடியற்ற மரம் போல விழுந்து தன் துக்கத்தைத் தெரிவிக்கு முகத்தான் நீலோற்பலம் போன்ற தன் கண்களி

னின்றும் நீரை ஆருகப் பெருக்கிக்கொண்டி ருந்தாள்.

அதைக் கண்ட புத்தருடைய மனம் சிறிது வாட்டமுற்றது. புத்தர் அதன்மேல் அவளுக்குச் சில ஆறுதல் வசனங்களைச் சொல்லிவிட்டுத் தாம் அங்கேயே இருப்பின் தம்முடைய மனம் மாறிவிடு மென்று கருதி, அவ்விடத்தை விட்டகன்று சபா மண்டபம்போய்ச் சேர்ந்தார்.

உறவினர் சீடராதல்

முதலில் சாக்கிய பிரபுக்கள், கௌதம புத்தரையும் அவருடைய கொள்கைகளையும் வெறுத்தார்களாயினும் பின்னர், அவர்களுக்குப் புத்தருடைய மேன்மை நன்கு விளங்கியது. ஆகவே, அவர்கள் புத்தரிடத்தில் பக்தியும், விசுவாசமும், அன்பும் கொண்டு அவரைப் பாராட்டிக் கொண்டாடலானார்கள்.

புத்தர், கபிலவஸ்து நகரத்தில் தங்கியிருக்கையில் அவர் உறவினர்களான ஆனந்தனும் தேவதத்தனும் அவருக்குச் சீடர்களானார்கள்.

மனைவியின் எண்ணம் பலிக்கவில்லை

புத்தரின் மனைவி மாத்திரம் அவரை எப்படியாவது தன் வழிக்குக் கொண்டுவரலாம் என்று எண்ணினாள். இங்ஙனம் எண்ணியவள் ஒருநாள்

தேவலோகத்து மாதர்களும் தன்னைக் கண்டு நாணத்தக்க விதமாகத் தன்னை ஆடை ஆபரணங் களால் அலங்கரித்துக்கொண்டு, புத்தர் இருந்த இடத்திற்குச் சென்று தன்னுடைய ரூபலாவண்ணி யங்களை அவருக்குக் காண்பித்தாள்.

புத்தர், அவைகளைக் கண்டு மகிழ்ந்து தம் கொள்கைகளினின்றும் நீங்குவரோ? புத்தரின் மனைவி, தனது எண்ணம் பலியாததைக் கண்டு மிகவும் வாட்டமுற்று, அவ்விடத்தை விட்டகன்று தன் இருப்பிடம் போய்ச் சேர்ந்து, கடவுளைத் தியானித்துக் கொண்டு இருக்கலானாள்.

பிறகு அவள், தன் மகன் இராகுலனைப் புத் தரின் சந்நிதானத்திற்கு அனுப்பி அவனை ஆசீர் வதிக்கும்படி சொன்னாள்.

புத்தரோ அவனை ஏற்று, அவனைத் தன் சிஷ் யர்களில் ஒருவனாகச் செய்து கொண்டார். அதை யறிந்த யசோதரை சிறிது மனவாட்ட முற்றாள்.

தம்முடைய பேரன் இராகுலன் சந்நியாசி யானதைக் கண்ட சுத்தோதனர், மிகவும் மனம் வருந்தித் தாய் தகப்பன் உத்தரவைப் பெறாமல் யாரையும் தமது சீடராக்கிக் கொள்ளுதல் கூடா தென்று புத்தருக்குக் கட்டளையிட்டார். புத்தரும் அக்கட்டளையை ஏற்றுக் கொண்டு அதன்படியே நடந்துவரலானார்.

கௌதம புத்தர், கபிலவஸ்து நகரத்தில் சுமார் இரண்டுமாத காலம்வரை தங்கி இருந்தார். அவ்வமயம் அவர் தம்முடைய கொள்கைகளைத் தினந்தோறும் ஜனங்களுக்கு எடுத்துரைத்துக் கொண்டே இருந்தார். அநேக மக்களும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் பலரும் அவரது கொள்கைகளைப் பின்பற்றி நடக்க முற்பட்டார்கள்.

புத்தர் மீண்டும் மகத ராஜ்யம் செல்லல்

புத்தர், கபிலவஸ்து நகரத்தில் சுமார் இரண்டு மாத காலம் தங்கியிருந்த பின்னர், மகத இராஜ்ஜியத்தின் தலை நகராகிய இராஜக் கிருகம் என்னும் பட்டணத்திற்குப் போந்து, ஆங்குப் பிம்பிசார மகாராஜனால் கொடுக்கப்பட்ட அழகிய மூங்கில் வனச்சோலையில் தங்கி யிருக்கலானார்.

வியாபாரி சீடனாதல்

கோசல இராஜ்ஜியத்தின் தலைநகராகிய சாவித்திரி என்னும் பட்டணத்தில் அனாதபிண்டகன் என்னும் பெயருடைய ஒரு வியாபாரி வசித்து வந்தான். அவன் பெரிய செல்வவந்தன். அவன் ஐந்நூறு வண்டிகள் நிறையச் சாமான்களை ஏற்றிக் கொண்டு, இராஜக்கிருகம் என்னும் பட்டணத்தின் வழியாகச் சென்றுகொண் டிருந்தான். அவ்வமயம் புத்தருடைய உபதேசங்களைக் கேட்டு அவன் அவருக்குச் சீடனாயினான்.

அவ்வியாபாரி, புத்தரும் அவருடனிருந்த சீடர்களும் தங்கியிருப்பதற்காக ஒரு தோட்டத்தை அவர்களுக்குச் சன்மானிக்க எண்ணங்கொண்டான். எனவே, அவன் ஜேதன் என்னும் பெயரினைக்கொண்ட அரசிளங் குமரனுடைய தோட்டத்தை அதிக கஷ்டப்பட்டு வாங்கிப் புத்தருக்கும் அவருடைய சிஷ்யர்களுக்கும் தானமாகக் கொடுத்தான்.

முதலில் ஜேதன், அந்தத் தோட்டத்தைக் கொடுக்கப் பிரியப்படவில்லை. பின்னர், அனதபிண்டகன் தன்னுடைய கருத்து எப்படியாவது நிறைவேறவேண்டும் என்று கருதி, அவ்வரசிளங் குமரனை அணுகி, அந்தத் தோட்டத்தின் விஸ்தீரணத்தளவு அக்காலத்தில் வழங்கி வந்த நாணயங்களைப் பரப்பி, அதை விலையாகத் தருவதாக வாக்களித்தான்.

அதன்மேல் அவ் வரசிளங் குமரன், அனதபிண்டகனின் வேண்டுகோளுக்கு இணங்கி அத்தோட்டத்தை அவனுக்குக் கொடுத்தான்.

வியாபாரி தருமம் செய்தல்

அத்தோட்டத்தில் அனதபிண்டகன், புத்தரும் அவருடைய சீடர்களும் தங்கி இருப்பதற்கென அநேக சத்திரம் சாவடிகளையும், விடுதிகளையும், வேறு பல கட்டடங்களையும் கட்டி முடித்தான்.

இவைகளோடு நில்லாது அவ் வியாபாரி இராஜக்கிருகத்திலிருந்து சாவித்திரி என்னும் இடம் வரைக்கும் சத்திரம் சாவடி முதலியவைகளைக் கட்டுவித்துத் தோப்பு, கிணறு, துரவு, குளம், குட்டை முதலியவைகளையும் வாய்க்கால் முதலியவைகளையும் ஏற்படுத்தினன்.

புத்தரும் அவருடனிருந்த அவர் சீடர்களும் மழைக்காலம் ஒழிந்த மற்றக்காலங்களில் வெளியூர்களுக்குச் சென்று, தங்கள் கொள்கைகளை மாந்தர்களுக்கு உபதேசித்து வந்தார்கள். மழைக்காலத்தில் அவர்கள் அனைவரும் மடங்களில் தங்கி அநேக விஷயங்களைக் குறித்துத் தர்க்கிப்பது வழக்கம்.

புத்தர், ஒரு நிமிஷநேரத்தையும் வீணுகக் கழிக்காமல் தமது புதிய கொள்கைகளைப் பிரபலப்படுத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தார்.

இங்ஙனம் புத்தர் தம்முடைய கொள்கைகளை மக்களுக்கு உபதேசித்துக் கொண்டுவந்தார். பிறகு மழைக்காலம் வந்தது. ஆகவே அவர் மகத ராஜ்ஜியத்துக்குப் போய் அங்கு இருந்த ஒரு மடத்தில் தம் சிஷ்யர்களுடன் தங்கி இருந்தார். தங்கி இருக்கையில் கபிலவஸ்து நகரிலிருந்து தூதன் ஒருவன் வெகு துரிதமாகப் புத்தரிடம் ஓடிவந்து, சுத்தோதனர் இறக்கும் நிலையில் இருப்பதாகவும் உடனே புறப்பட்டுவரவேண்டுமென்றும் அவரை வேண்டிக் கொண்டான்.

புத்தர் தந்தையின் ஈமக்கடன் முடித்தல்

அந்தத் தூதனுடைய வேண்டுகோளுக் கிணங்கிய புத்தர், மகதராஜ்ஜியத்தை விட்டுக் கபிலவஸ்து நகருக்குப் பிரயாணமானார். ஊரை அடைந்தவுடன் அவர், தமது தந்தையார் உயிரோடு இருப்பதைக் கண்டார். தம் மைந்தர் வந்ததைக் கண்டு அரசர் சந்தோஷித்தார். பின்னர், சில தினங்கள் சென்றதும் அரசர் மண்ணுலக வாழ்க்கையை நீத்தார். அவருக்குச் செய்யவேண்டிய கிரியைகள் யாவற்றையும் புத்தர் செய்துவிட்டு மகத இராஜ்ஜியத்திற்குப் போனார்.

சுத்தோதனர், தாம் இருந்தவரையில் தமது குமாரரை எப்படியாவது திருப்பி, மன்னதி மன்னராக்கவேண்டுமென் றெண்ணி இருந்தார். அதற்கேற்ப அவர் அநேக உபாயங்களைச் செய்து பார்த்தார். எவ்வுபாயமும் பலியாது போயிற்று. வயது முதிர முதிர அரசருக்குத் தம் மைந்தர் உபதேசித்துக் கொண்டுவந்த கொள்கைகளில் நம்பிக்கை ஏற்பட்டது. ஏற்படவே அரசர் தம் வயோதிக காலத்தில் தமது குமாரருடைய கொள்கைகளைப் பின்பற்றி நடந்து வந்தார் என்பதை இங்கு உரைப்பது அவசியமாகும்.

புத்தர் குடும்பத்தினர் சந்நியாசியாதல்

சுத்தோதனர் இறந்த பின்னர், அவருடைய பட்டமகிஷியும் மற்று மிருந்த இராஜ கன்னிகை

களும் புத்தருடைய மனைவியாகிய யசோதரையும், புத்தர் தங்கியிருந்த மகத இராஜ்ஜியத்திற்குச் சென்று, தங்களையும் சந்நியாசினிகளாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

முதலில் புத்தர் அவர்களின் வேண்டுகோள்களுக்கு இணங்கவில்லை. எனினும், பின்னர் ஆனந்தனின் வேண்டுகோளால் புத்தர் அவர்களைத் தம்முடைய கட்சியில் சேர்த்துக்கொள்ள உடன்பட்டார்.

பிறகு அவர்கள், இராஜபோகங்களை யெல்லாம் துறந்து, ஜனங்களுக்கு நன்மை செய்வதையே தங்களுடைய முதற் கொள்கையாகக் கொண்டு, அதற்குத்தக்க காரியங்களைச் செய்து வந்தார்கள். இவர்களைப் பின்பற்றி உலக ஆடம்பரங்களிலும் சுகதுக்கங்களிலும் வெறுப்புற்ற அநேகம் ஸ்திரீகள் சந்நியாசினிகளாக முன் வந்தார்கள்.

இறந்த குழந்தையை எழுப்பித்தர வேண்டல்

புத்தரின் உபதேசங்களைக் கேட்டுச் சந்நியாசினிகளான ஸ்திரீகளில் கிசகோதமி என்னும் பெயரினைக் கொண்ட ஸ்திரீ ஒருத்தி இருந்தாள். அவளுக்கு ஒரே ஒரு குழந்தை இருந்தது. அக்குழந்தை நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டது. குழந்தை இறந்துவிடவே அவள் அக் குழந்தையை இடுப்பில்

எடுத்து வைத்துக்கொண்டு, புத்தரிடம் சென்று தன் குறைகளைச் சொல்லி, அக்குழந்தையை உயிர்ப்பித்துக் கொடுக்கவேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொண்டாள்.

அவளுடைய குறைகளைக் கேட்ட புத்தர், அவளை நோக்கி, 'யாரும் சாகாத ஒரு வீட்டிலிருந்து கொஞ்சம் கடுகை வாங்கிக் கொண்டுவந்து கொடுத்தாயானால் நான் உன் குழந்தையை எழுப்பித் தருகிறேன்,' என்றார்.

அவள், அதற்கிணங்கி எங்கும் அலைந்து திரிந்து கடுகு கேட்டுப் பார்த்தாள். ஒருவரும் சாகாத வீடு ஒன்று கூட அவளுக்குக் கிடைக்கவில்லை. கடைசியில் அவள் 'மரணம்' என்பது எல்லோருக்கும் வரக்கூடியது என்ற உண்மையை அறிந்து கொண்டு புத்தரிடம் வந்து சேர்ந்தாள்.

புத்தர், அவளுக்குத் தக்கவாறு உபதேசம் செய்தார். அந்த உபதேசத்தின்படி அவள் நடந்து மனம் தேறுதல் அடைந்து தன்னால் கூடிய நன்மைகளைப் பிறருக்குச் செய்துகொண்டிருந்து இறுதியில் இறைவன் திருவடியை அடைந்தாள்.

சிஷ்யர்கள் பிக்ஷுக்கள் என்று பெயர் பெற்றது

புத்தரின் கொள்கைகளை ஜனங்களுக்கு எடுத்துரைக்க முன்வந்த சிஷ்யர்களுக்குப் பிக்ஷுக்கள் என்ற பெயர் ஏற்பட்டது. சிஷ்யைகளுக்குப்

பிக்ஷுணிகள் என்பது பெயராகும். புத்தருடைய கொள்கைகளுக்கு அடிப்படையாக இருப்பது, 'பிறரை உன்னுடைய சகோதரனைப் போல நினை,' என்பதாகும். கடவுளுடைய சிருஷ்டியில் உயர்வு தாழ்வு இல்லையென்பதுவும், பிற உயிர்களுக்குக் கெடுதல் செய்யாமல் இருப்பதுவும், நிர்வாணக் கொள்கைக்கு அடிப்படையான செய்கைகளாகும். இவ்வடிப்படையான விஷயங்களைக் குறித்துக் குறைகூறக் கூடியவர் இவ்வுலகில் ஒருவரும் இலர்.

பௌத்த சங்கம்

புத்தரின் கொள்கைகளைப் பரப்ப ஏற்பட்ட சிஷ்யர்களின் கூட்டத்தின் தொகுதிக்குச் 'சங்கம்' என்னும் பேர் புத்தர் காலத்திலேயே ஏற்பட்டு வழங்கிவருகிறது.

பௌத்த சங்கத்தில் சேரப் பிரியப்படுகின்ற ஒவ்வொருவரும் பத்துப் பிக்ஷுக்கள் கூடிய ஒரு சபையின் முன் ஆஜராக வேண்டும். இச் சபையினர், வந்தவர், சங்கத்தில் சேர்ந்துகொள்ளத் தக்க யோக்கியதை உள்ளவராவென்று கவனித்துப் பின்னரே அவரைச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளுவது வழக்கம். முதலில் அவர்கள் தங்களில் வயதில் மூத்தவரான பிக்ஷு வீற்றிருக்கும் இடத்திற்கு அவரை அனுப்புவார்கள். இந்த வயதின் மிக்க பிக்ஷு, கூடத்தின் ஒரு மூலையில் தன்னந்

தனியாய் அமர்ந்திருப்பார். மற்ற பிக்ஷுக்கள் கூடத்தின் இரண்டு பக்கங்களிலும் உட்கார்ந்திருப்பார்கள்.

பிக்ஷுக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர் சாதாரண உடைதரித்து, பிக்ஷுவானவுடன் தரித்துக் கொள்ளுவதற்கு வேண்டிய உடையைக் கையில் தாங்கிக்கொண்டு, வயதில் மூத்த பிக்ஷுவின் முன்னே சென்று, முழங்கால் படியிட்டுத் தம்மைப் பௌத்த சங்கத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்ளுவார். பின்னர், அவர் அவ்விடத்தை விட்டகன்று பிக்ஷுவின் உடை தரித்து, அவ்விடத்திற்கு மீண்டும் வந்து முழங்காற் படியிட்டுக் கீழ்க் கூறப்படும் மூன்று கட்டளைகளை மூன்றுதரம் உச்சரிப்பார்.

1. நான் புத்தருக்கு அடிமையாகின்றேன்.

2. நான் புத்தரின் கொள்கைக்கு அடிமையாகின்றேன்.

3. நான் புத்த சங்கத்தைச் சேர்ந்த பிக்ஷுக்களுக்கும் பிக்ஷுணிகளுக்கும் அடிமையாகின்றேன்.

பிறகு புதிதாகச் சேர்ந்த பிக்ஷுவானவர் பின்கூறப்படும் பத்துக் கொள்கைகளையும் ஏற்று, அவைகளின்படி நடப்பதாக ஒப்புக்கொள்ளுவார்.

1. நான் உயிர்க் கொலை புரியமாட்டேன்.

2. நான் எவ்விதமான திருட்டுத் தொழிலி லும் பிரவேசிக்க மாட்டேன்.

3. நான் மனோவாக்குக் காயங்களால் பரி சுத்தமாய் இருப்பேன்.

4. நான் பொய் பொறாமை முதலிய துர்க் குணங்களை மேற்கொள்ள மாட்டேன்.

5. நான் போதையைத் தரும் 'லாகிரி' வஸ் துக்களை உபயோகிக்க மாட்டேன்.

6. நான் குறிப்பிடப்பட்ட வேளைகளில்தான் ஆகாரம் உட்கொள்ளுவேன்.

7. நான் விளையாட்டு வினோதங்களில் எனது காலத்தைக் கழிக்க மாட்டேன்.

8. நான் நகைகளை அணிந்து கொள்ள மாட் டேன்.

9. நான் சுகம் தரும் பஞ்சணைகளின் மீது படுத்து உறங்க மாட்டேன்.

10. நான் பணம் காசு முதலியவற்றைப் பிற ரிடமிருந்து வாங்கிக்கொள்ள மாட்டேன்.

இவ்விதம் வாக்குறுதி செய்த பிறகு புதிய பிக்ஷுவானவர், தமக்கு முன் பிக்ஷுவானவ ருடைய சிஷ்யராகி அவருக்கு வேண்டிய பணிவிடை களைச் செய்தல் வேண்டும். ஒவ்வொரு பௌத்த

மடத்திலும் புத்தரின் ஞாபகார்த்தமாகப் போதி விருட்சம் ஒன்று வைக்கப்பட் டிருக்கும். அதற்குத் தண்ணீர் வார்த்து அதைக் காப்பாற்ற வேண்டும். பின்னர் மனதைப் பல விஷயங்களிலும் செல்ல விடாது அதை ஏதாகிலும் ஒரு நல்ல விஷயத்தில் செலுத்திக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு இருத்தல் வேண்டும்.

புத்த பிக்ஷுக்கள், தினந்தோறும் ஒரு வேளை ஆகாரமே உட்கொள்ளல் வேண்டும். பகல் பன்னிரண்டு மணிக்குள் போசனம் செய்துவிட வேண்டும். அவர்கள் பிச்சை எடுத்தே உண்ணுதல் வேண்டும். அவர்கள் தங்கள் வாயைத் திறந்து, 'எனக்கு இஃது வேண்டும், அஃது வேண்டும்,' என்று கேட்கக் கூடாது. மக்கள் எதைக் கொடுக்கின்றார்களோ அதை அவர்கள் வாங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஒரு வீட்டில் ஆகாரம் கிடைக்கா விட்டால் அவர்கள் வேறொரு இல்லத்திற்குச் செல்ல வேண்டும். எக்காரணத்தைப் பற்றியும் அவர்கள் பணம் காசு ஆகியவைகளைத் தம்மிடத்தே வைத்துக் கொண்டு இருத்தல் கூடாது.

புத்த பிக்ஷுக்களிடத்தில் முக்கியமாய் இருக்க வேண்டியவை எட்டுப் பொருள்களாம். அவை திருவோடு, க்ஷவரக்கத்தி, ஊசி, தண்ணீர்க் கூஜா, மூன்று துகில்கள், அரைக்கச்சு ஆகிய இவைகளே யாம்.

புத்த பிக்ஷுக்கள் உலக சம்பந்தமான வியவ காரங்களில் தலையிடாது பிரார்த்தனை செய்வதி லேயே தங்கள் காலத்தைக் கழித்தல் வேண்டும். இல்லாவிடின் பௌத்த சமய நூல்களைப் படித்துக் கொண்டு இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட இடத் தைச் சேர்ந்த பௌத்த பிக்ஷுக்கள் மாதத்திற்கு இரண்டு முறை, அமாவாசை யன்றும் பௌர்ணமி யன்றும், ஒன்று கூடித் தாங்கள் செய்த பாபச் செயல்களைச் சொல்லி ஒருவரை ஒருவர் மன்னிப் புக் கேட்டுக் கொள்ளுவார்கள். அநேக பிக்ஷுக் கள் வனங்களுக்குச் சென்று அங்கு மரநிழலில் உட்கார்ந்து பிரார்த்தனை செய்து வருவார்கள். இயற்கை விநோதங்களிலிருந்து அவர்கள் பற்பல உண்மைகளைக் கண்டுகொண்டார்கள்.

சுத்தோதனர் இறந்த பிறகு அவர் பட்ட மகிஷியும் மற்ற மாதர்களும் சந்நியாசினியானார்க ளல்லவா? அவர்களிலும் சிலர் புத்தரின் கொள்கை களைப் பற்பல இடங்களில் பரப்பி வந்தனர்.

ஜாதி வேறுபாடு இல்லை

பௌத்தரால் ஏற்படுத்தப்பட்ட சங்கம் ஜாதி மதம் ஆகிய இவைகளைக் கடந்ததாகும். அந்தச் சங்கத்தில் பிராமணர்களும், க்ஷத்திரியர்களும், வைசியர்களும், வேளாளர்களும், தாழ்ந்த வகுப் பைச் சேர்ந்த பலரும் சேர்ந்திருந்தார்கள்.

பரத்வாஜர் சிஷ்யராதல்

அக்காலத்தில் பரத்வாஜர் என்னும் பெயரினைக் கொண்ட பிராமண கிருஷிகர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு தினம் புத்தரை அணுகி, 'ஐயா, பெரியவரே! தாங்கள் ஏன் ஒரு விதமான வேலையும் செய்யாது காலத்தைக் கழிக்கின்றீர்?' என்று வினவினர்.

அதற்குப் புத்தர் அவரை நோக்கி, 'ஐயா, நான் ஜனங்களிடையில் அன்பைப் பரப்பி அவர்களை மோக்ஷமடையுமாறு செய்கின்றேன்,' என்றார்.

அதைக் கேட்ட அந்தப் பரத்வாஜ கிருஷிகர் புத்தரை ஆசிரியராகக் கொண்டார். புத்தரின் கொள்கைகள் காலக்கிரமத்தில் நாடெங்கும் பரவியதால் அநேகர் அவருக்குச் சீடர்களாயினர்.

பிராமணச் சிறுவன் மமதை

ஒரு சமயம் பிராமணச் சிறுவன் ஒருவன், தான் உயர்ந்த ஜாதியில் பிறந்தவனென்னும் மமதை கொண்டு, புத்தரிடம் சென்று அசம்பாவிதமாய் நடந்து கொண்டான். புத்தர் தமது நன்மொழிகளால் அவனுடைய ஜாதி மமதையை அகற்றி அவனைத் தம் சிஷ்யனாக்கிக் கொண்டார்.

பிராணிகளிடத் தன்பு

கௌதம புத்தர், மானிடர்களிடத்தில் மாத்திர மன்றி மற்ற சீவராசிகளிடத்திலும் பேரன்பு பூண்டு ஒழுகிவந்தார். ஒருநாள் கௌதமர் மகத இராஜ்ஜியத்தில் சுற்றிக்கொண் டிருந்தார். அப் போது மானொன்று வலையில் அகப்பட்டுக் கொண்டு அவஸ்தைப்படுவதை அவர் கண்ணுற்றார். உடனே அவர் அதனிடம் இரக்கங் கொண்டு அதை வலையி னின்றும் விடுவித்தார். பின்னர் அவர், அருகில் இருந்த ஒரு மரத்தடியிற் சென்று அங்கு உட்கார்ந்து பிரார்த்தனை செய்து வந்தார்.

வேடனை மன்னித்தல்

அவர் தம்மையே மறந்து பிரார்த்தனை செய்துகொண் டிருக்கும் சமயம், புத்தர் மானை வலையினின்றும் விடுவித்தமைக்காகக் கோபங் கொண்ட வேடுவன், தன் கையில் நாணேற்றிய அம்பைத் தாங்கிக்கொண்டு, புத்தரை அடித்துக் கொல்ல எண்ணி, அவர் உட்கார்ந்திருந்த இடத் திற்கு வந்தான். ஆனால் அருகில் வந்தவுடன் அவரைக் கொல்ல அவன் மனந் துணியவில்லை. உடனே அவன் அவர் பாதங்களில் வீழ்ந்து, தான் செய்ய உத்தேசித்திருந்த காரியத்தைச் சொல்லித் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண் டான். புத்தர் அவனை மன்னித்து ஆசீர்வதித் தனுப்பினார். அவனும் அவன் மனைவியும் மக்

களும் புத்தரின் உபதேசத்தைக் கேட்டு நன்னெறியில் ஒழுகலாயினர்.

உயிர்ப்பலி தவிர்த்தல்

ஒரு தினம் சில இடையர்கள், யாகத்திற்கெனப் பல ஆடுகளை ஓட்டிக்கொண்டு போனார்கள். அந்த ஆடுகளைக் கண்ட புத்தர், ஆட்டிடையர்களுடன் சென்று யாகத்துக்கு அதிபதியாய் இருந்த பிராமணனைநோக்கி, உயிர்க்கொலை செய்யாது இருப்பதன் மேன்மையை எடுத்துரைத்தார். உடனே அந்தப்பிராமணன் யாகத்திற்காகத் தான் கொண்டு வந்த ஆடுகளை மலைச்சாரலுக்கு ஓட்டிவிட்டான்.

கள்வன் அடிவணங்குதல்.

புத்தர், 'கோபத்திற்கு இடங் கொடுக்கக் கூடாது,' என்று பலவிதமாக ஜனங்களுக்கு எடுத்துரைத்தார். ஒரு சமயம் புத்தர் கோசல நாட்டில் சஞ்சாரஞ் செய்துகொண்டிருந்தார். அப்போது அவர் ஒரு காட்டின் வழியே செல்ல நேர்ந்தது.

அதைக் கண்ட ஜனங்கள், புத்தரை அந்தக் காட்டின் வழியே செல்லவேண்டாமென்றும், அந்தக் காட்டில் ஒரு கள்வன் வசிக்கின்றான் என்றும், அவன் எல்லோரையும் அடித்துக் கொண்டு வருகின்றான் என்றும் தெரிவித்தார்கள்.

புத்தர், அதற்காகப் பயப்படாமல் அந்தக் காட்டின் வழியே செல்லலானர். புத்தர் சற்று நேரத்தில் அக் கள்வனுக்கு எதிரில் வந்து விட்டார்.

புத்தரைக் கண்ட அக் கள்வன், சீற்றங் கொண்டு அவரைக் கொல்வதற்காகத் தன் கையில் இருந்த தண்டத்தினல் ஓங்கி அவரை அடிக்கப் போனன். அவ்வமயம் அவன், புத்தரின் முக விலாசத்தைக் கண்டு, ஒன்றும் செய்யத் தோன் ருதவனய், அவர் கால்களில் வீழ்ந்து தன்னை மன் னிக்கும்படி கேட்டுக்கொண்டான்.

அப்படியே அவரும் அவனை மன்னித்து ஆசீர்வதித்தார். பிறகு அவன் தனது துர்க் குணங்கள் நீங்கப்பெற்றுப் புத்தரைப் பின்தொ டர்ந்து செல்வானயினன்.

சுற்றுப்புறங்களுக்கெல்லாம் பெரிய தீங்கை உண்டாக்கிக் கொண்டிருந்த அக் கள்வன், தன் மூர்க்ககுணம் மாறி, ஒரு சாதுவைப்போலப் புத்தருடன் சென்றுகொண் டிருந்ததைக்கண்டு, ஜனங்கள் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந் தார்கள்.

அக் கள்வன் பெயர் அங்குலிமாலன் என் பதாகும். அவன் புத்தருக்குச் சிஷ்யனகி எல் லோராலும் கொண்டாடப் பட்டான்.

ஆரும் அத்தியாயம்

புத்தரும் அவருடைய பகைஞர்களும்

புத்தர் தமது மனைவியைத் தனியே விட்டுச் சந்நியாசியானார் அன்றோ? அதை அறிந்த புத்தரின் மாமனார், தமது மகளுக்கு நேர்ந்த துர் அதிருஷ்டத்திற்காக மிகவும் வருந்திச் சமயம் நேர்ந்தபோது, புத்தருக்கு அவமானம் விளைவிக்க வேண்டுமென்று கருதியிருந்தார்.

புத்தர் அநேக கஷ்டங்களுக்குப் பின், போதி விருட்சத்தின் அடியில் ஞானம் கைகூடப் பெற்றார் அன்றோ? ஞானம் வந்தெய்திய பிறகு புத்தர், தாம் அறிந்தவைகளைப் பிறருக்குப் போதிக்கலானார்.

இங்ஙனம் இருந்து வருகையில், அவர் தம் மாமனார் ஊருக்கும் சென்று, ஆங்கும் தம் கொள்கைகளைப் பரப்பலானார். அதுதான் தக்க தருணமென்று கருதிய புத்தரின் மாமனார், புத்தரை ஒரு தினம் அநேகர் முன்னிலையில் அவமானப் படுத்தினர். புத்தர் அவரைப் பொருட்படுத்தினரல்லர்.

புத்தர் கபிலவஸ்து நகரத்திற்குச் சென்றிருந்த போது ஆனந்தரும், தேவதத்தரும் அவர் உபதேசங்களை ஏற்றுப் பௌத்த பிக்ஷுக்கள் ஆயினர் என்று முன் சொன்னோமல்லவா?

ஆனந்தரிடத் தன்பு

புத்தர் இடைவிடாது தம் கொள்கைகளைப் பரப்பத் தேசசஞ்சாரம் செய்துகொண் டிருந்ததினி மித்தம், அவரது தேகம் மெலிவடைய ஆரம்பித்தது. அதைக்கண்ட பிக்ஷுக்கள், ஆனந்தரை அவருடன் எப்போதும் இருக்கும்படி கட்டளையிட்டார்கள். ஆனந்தரும் அக்கட்டளையை ஏற்றுப் புத்தரை விடாது அவருடன் கூடவே இருந்து வந்தார். அதனால் புத்தருக்கு ஆனந்தரிடத்தில் அதிக அன்பும் பற்றும் ஏற்பட்டிருந்தது.

தேவதத்தன் சூழ்ச்சி

புத்தர் ஆனந்தரிடத்தில் அதிக அன்பும் பற்றும் கொண்டிருந்ததை உணர்ந்த தேவதத்தன், புத்தர்மேல் வெறுப்படைய ஆரம்பித்தான். சிறு வயது முதற்கொண்டே புத்தருக்கும் தேவதத்தனுக்கும் பகைமை ஏற்பட்டு, அப்பகைமை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வந்தது. தேவதத்தன், புத்தரின் உபதேசங்களைக் கேட்டு அவருக்குச் சிஷ்யனாகவில்லை. அவருக்குக் கேடுசெய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் தேவதத்தன் பற்பல வழிகளில் ஆனந்தரையும் புத்தருக்குப் பகைவராக்க வழிதேடினான். ஆனால், அவன் முயற்சிகளில் ஒன்றும் பலியாமற் போயிற்று. தேவதத்தன், பிக்ஷுக்களிடத்தில் புத்தரைக் குறித்துப் பற்பல விதக் கட்டுக்கதைகளைச் சொல்லி, அவர்கள் பலரை

யும் அவரிடத்துப் பகைகொள்ளுமாறு செய்தான். எம் முயற்சியிலும் தேவதத்தன் வெற்றி பெற்றானில்லை.

ஆயினும் ஒரு சிலர், தேவதத்தனின் பொய் உரைகளைக் கேட்டுப் புத்தரைவிட்டுத் தேவதத்தனுடன் சேர்ந்து கொண்டனர்.

அஜாத சத்துரு தேவதத்தன் வசப்படல்

பிம்பிசார மகாராஜனுக்கு ஒரு புத்திரன் இருந்தான். அவன் பெயர் அஜாத சத்துரு என்பதாகும். அவனைத் தேவதத்தன், தன் தந்திரத்தால் தன்னை மிகவும் நன்றாய் மதிக்கும்படி செய்து கொண்டான். தன்னால் பற்பல விதமான அதிசயங்களைச் செய்யக்கூடுமென்று அவன் அரசகுமாரனிடம் தெரிவித்திருந்தான். அரசகுமாரன், அவன் கூறியவைகளை யெல்லாம் உண்மை யென்று நம்பினான்.

அரசகுமாரன், தேவதத்தனும் அவன் சீடர்களும் தங்கி யிருப்பதற்கென இராஜக் கிருகத்தில் ஒரு பெரிய சத்திரத்தைக் கட்டிக்கொடுத்தான். அதோடு நில்லாது அவன் அவர்களுக்கு வேண்டிய சாப்பாட்டு வசதிகளையும் செய்து கொடுத்தான். தேவதத்தன், புத்தரை ஒழித்துவிடுவதற்கான முயற்சிகள் பலவற்றையும் செய்துகொண்டே வந்தான்.

பாடலிபுரத்திற்கு அருகில் வேசாலி என்னும் ஒப்பற்ற நகரம் ஒன்று அமைந்திருந்தது. அந்த நகரம் மாடமாளிகைகளாலும், கூடகோபுரங்களாலும், தோட்டம் துறவுகளாலும் சிறப்புற்று ஓங்கி விளங்கியது. அது ஒரு குடியரசு நாடாக விளங்கி வந்தது.

அஜாத சத்துரு பிறப்பு

இவ் வேசாலி நகரத்தில் ஒரு நியாயாதிபதி இருந்தார். அவருக்கு இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள். அவர்கள் வீட்டிற்கு ஒரு நாள் ஜோதிடர் ஒருவர் வந்தார். அவர் அந்த இரண்டு பெண்களின் ஜாதகத்தையும் பார்த்தார். அவர் முதல் பெண்ணாகிய வாசவி, அரசனுக்கு மனைவி யாவாள் என்றும், அவள் வயிற்றில் ஓர் ஆண் குழந்தை பிறக்கு மென்றும், அது தன்னுடைய தகப்பனைக் கொன்று விட்டு இராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் என்றும் தெரிவித்தார். இரண்டாவது பெண் வயிற்றில் புஜ பல பாராக்கிரமங்களுடனும் நற்குணங்களுடனும் கூடிய குழந்தை ஒன்று பிறக்குமென்றும் அறிவித்து விட்டுப் பிறகு அவர் தாம் வந்த வழியே சென்று விட்டார். காலக்கிரமத்தில், அவ்விரண்டு பெண்களும் வயதடைந்தார்கள். இப்படி இருக்கையில் பிம்பிசார மகாராஜன் வாசவியின் ரூபலாவண்யங்களைக் கேள்வியுற்று, அவள் மீது காதல் கொண்டு

அவளைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டான். அவளுக்கும் பிம்பிசார மகாராஜனுக்கும் பிறந்தவனே அஜாத சத்துரு ஆவன்.

அஜாத சத்துருமீது பிம்பிசாரன் வெறுப்பு

அஜாதசத்துரு, நற்குணங்கள் பொருந்தியவனாய் இல்லாமையினால் பிம்பிசார மகாராஜனுக்கு அவன் மேல் வெறுப்பு உண்டாயிற்று. அவன் தேவதத்தனுடன் சேர்ந்திருந்தமை பிம்பிசார மகாராஜனுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. அவனுடைய சிநேகத்தை விட்டு ஒழிக்கும்படி மகாராஜா தன் குமாரனுக்குப் பலதரம் சொன்னான். என்ன உரைத்தும் மகன் கேட்கவில்லை. எனவே மகாராஜன் மிகுந்த வருத்தமடைந்தான்.

அஜாத சத்துருக்கு வயது வளர வளர அவனுடைய துர்க்குணங்களும் வளர்ந்தன. அதைக் கண்ட மகாராஜன், அவனுக்கு இராஜாங்கத்தில் பொறுப்பான உத்தியோகம் அளித்தால் அவன் திருந்துவான் என்று கருதி அவனுக்குப் பொறுப்பான உத்தியோகம் ஒன்றைக் கொடுத்தான். எனினும், அவன் திருந்தவில்லை.

பின்னர் அரசன், தன் இராஜ்ஜியத்தைத் தன் பிள்ளையிடம் ஒப்புவித்துவிட்டான். இராஜக்கிருகம் என்னும் பட்டணத்தை மாத்திரம் அரசன் தனக்கென வைத்துக்கொண்டான். சிறிது கால

மான பிறகு அதையும் அரசன், தன் மகனிடம் ஒப்புவித்துவிட்டு அவனைத் தேவதத்தனிடத்தில் ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளும்படி கூறினன்.

அஜாத சத்துரு, தன் தந்தை பிம்பிசாரனைச் சிறைப்படுத்தல்

அரசன், இங்ஙனம் கூறியதைக் கேட்டு அரசிளங்குமரன், கோபம் கொண்டவனாய் அரசனைத் தன் தகப்பன் என்றும் கருதாது சிறையில் அடைத்து வைத்தான். அதோடு அவன் அரசனுக்கு வேண்டிய உணவுகளையும் அனுப்பக் கூடாதென்று கட்டளையிட்டான்.

எனினும், அரசன் தேவி எவரும் அறிந்து கொள்ளாதவாறு உணவைக் கொண்டுபோய்த் தன் கணவனுக்குக் கொடுத்துக்கொண்டு வந்தாள். அதை யறிந்த அஜாதசத்துரு, அவளை அவ்விதம் செய்யாதவாறு தடுத்துவிட்டான்.

அரசன் அடைபட்டிருந்த சிறையில் ஒரு ஜன்னல் இருந்தது. அந்த ஜன்னலுக்கு நேராகச் சிறிது தூரத்தில் ஒரு குன்று இருந்தது. அக் குன்றின் மீது புத்தர் அடிக்கடி போய் நிற்பது வழக்கம். ஜன்னலின் வழியாக அரசன் புத்தரைக் கண்டு சந்தோஷங் கொள்ளுவான். அதையும் அஜாத சத்துரு அறிந்துகொண்டு அந்த ஜன்னலையும் மூடிவிடச் செய்தான்.

அஜாத சத்துருவின் மைந்தன் நோயுற்றது

இங்ஙனம் இருக்கையில் அஜாத சத்துருவின் குமாரனுக்கு 'உகிர்ச்சுற்று' ஏற்பட்டது. அதனு லேற்பட்ட நோயைப் பொறுக்க மாட்டாது அவன் அதிகத் துன்பமுற்று அழுதவண்ண மிருந்தான். பிறகு அழுதவண்ணம் அவன் தன் தகப்பனிடம் வந்தான்.

அழுதுகொண்டுவந்த புத்திரனை அஜாத சத்துரு வாரி யெடுத்து மடிமீது வைத்துக்கொண்டு தட்டிக் கொடுத்தான். அதைக் கண்ட வாசவி, தன் குமா ரனை நோக்கி, 'அப்பா, மகனே! உன்னையும் உன் தகப்பனுர் நீ சிறுவனுய் இருந்தபோது இவ்வித மாகத்தான் பல சமயங்களில் தட்டிக் கொடுத்தார்,' என்று சொன்னுள்.

நல்லதிருஷ்ட வசமாக அவளுடைய இந்த வார்த்தைகள் அஜாதசத்துருக்கு நற் புத்தியைப் பிறப்பித்தன. உடனே அவன், தன் வேலைக் காரர்களைக் கூப்பிட்டுத் தன் தந்தையைச் சிறையி னின்றும் விடுதலை செய்யும்படி ஆஞ்ஞாபித்தான்.

அவ்வண்ணமே வேலையாட்கள் சிறைக்கூடத் திற்குச் சென்றுர்கள். ஆங்குப் பிம்பிசார மகா ராஜன் இறந்து கிடந்ததைக் கண்டு அவர்கள் ஓடோடியும் வந்து அஜாதசத்துரு விடத்தில் அச் சங்கதியைத் தெரிவித்தார்கள்.

அஜாத சத்துரு என்னும் பதத்திற்குப் பகைவன் என்பது பொருள். மேற் கூறிய வரலாற்றினால் ஜோதிடர் சொல்லிய வண்ணம் அஜாத சத்துரு தன் தகப்பனைக் கொன்று சிம்மாசனத்தைக் கைப்பற்றினவன் ஆயினன்.

ஏழாம் அத்தியாயம்

விருத்தாப்பியமும் அந்தியகாலமும்

பிம்பிசார மகாராஜன் இறந்த பிறகு அவன் மகனுகிய அஜாதசத்துரு பட்டத்துக்கு வந்தான். அவன் துர்விஷயங்களுக்கெல்லாம் இருப்பிடமான வன். துஷ்டர்களுக்கு அவன் பெருந் துணைவனுய் இருந்து வந்தான். அவன் தனது தந்தைக்குப் பிறகு கோசல இராஜ்ஜியத்தையும் வேசாலி நாட்டையும் கைப்பற்றிக்கொண்டு வட இந்தியாவில் கீர்த்தி பெற்ற அரசனுய் விளங்கி வந்தான்.

தேவதத்தன், புத்தரைக் கொல்ல முயலுதல்

புத்தர், இராஜக்கிருகத்துக்கு வந்திருந்தபோது தேவதத்தன், சிலருடைய உதவியைக் கொண்டு அவர் தலையின்மீது பெரிய கல் ஒன்றைப் போட முயற்சித்தான். அம்முயற்சி அவனுக்குக் கைகூட வில்லை. ஆகவே தேவதத்தன் தானுகவே அச் செயலைச் செய்ய எண்ணி அவர் மீது பெரியதொரு கல்லை உருட்டப் பார்த்தான். தெய்வாதீனமாய் அக்கல் அவர் தலையில் படாது அவரது கால் விரல் களில் பட்டு அவருக்குக் கொஞ்சம் நோயை உண் டாக்கியது.

உடனே புத்தரின் சீடர்கள் அஜாதசத்துருவின் மாற்றாந்தாயின் பிள்ளையாகிய ஜீவகனை அழைத்

துக்கொண்டுவந்து புத்தருக்கேற்பட்ட காயத்தைச் சொஸ்தப் படுத்தினர்கள்.

புத்தர் மீது யானையை ஏவுதல்

தேவதத்தன், புத்தரை வாளாவிடுவதில்லையென்று கங்கணங் கட்டிக்கொண்டு அரசனின் 'இலாயத்தில்' இருந்த ஒரு முரட்டுயானையைக் கொண்டு புத்தரை நாசப்படுத்த எண்ணினன். எண்ணியவன் யானைப் பாகனுக்குப் பணங் கொடுத்து அவனைத் தன் வசமாக்கிக் கொண்டு, புத்தர் ஒரு நாள் தெருவின் வழியாகச் சென்று கொண்டிருக்கையில் யானையை அவிழ்த்து அவர் மீது விடும்படி செய்தான்.

அது கோபாவேசங்கொண்டு தன்னெதிரில் இருந்தவைகள் பலவற்றையும் தவிடுபொடி செய்து கொண்டு ஓடிவந்தது. ஜனங்களெல்லோரும் நாலா பக்கங்களிலும் ஓடி ஒளித்துக்கொண்டார்கள். ஆனல் புத்தரும் அவர் பிரிய சிஷ்யராகிய ஆனந்தரும் மட்டும் சாதாரணமாகத் தெருவில் சென்றுகொண்டிருந்தார்கள்.

யானை, புத்தரைக் கண்டவுடன் தன் முரட்டுக் குணத்தை யொழித்து ஒரு பசுவைப்போல அவருடன் செல்ல ஆரம்பித்தது. அதைக் கண்ட ஜனங்கள் ஆனந்தமும் ஆச்சரியமும் கொண்டார்கள்.

தேவதத்தன் மீது அஜாதசத்துரு வெறுப்படைதல்

நிற்க, 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்,' என்பதற்கேற்ப அஜாதசத்துரு, தேவதத்தனிடத்தில் வரவரப் பிரியம் குறைந்து அவநம்பிக்கை கொள்ள ஆரம்பித்தான்; அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு நடப்பதையும் விட்டுவிட்டான்.

அவனுடன் இருந்த சிஷ்யர்களுக்கும் அவனது துர்க்குணங்களும் துர்விஷயங்களும் வெளியாகி விட்டன.

ஆகவே, அவர்கள் தேவதத்தனை விட்டு நீங்கிப் புத்தரிடம் வந்து, தாங்கள் அறியாமையால் செய்த குற்றங்களைப் பொறுத்துத் தங்களை ஏற்றுக் கொண்டு முன்போலவே ஆதரித்து நற்கதிக்குட் படுத்த வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

கருணையே உருவாக அமைந்த அவ் அண்ணல் அவர்களுடைய வேண்டுகோளை அங்கீகரியாது விடுவாரோ? அவர்கள் செய்த குற்றங்கள் பலவற்றையும் மறந்து, அவர் மறுபடியும் அவர்களைத் தம்மிடத்தில் சேர்த்துக் கொண்டார்.

அஜாதசத்துரு புத்தரை அடைதல்

ஒருநாள் அஜாதசத்துரு, மாளிகையின் மேல் மாடத்தில் ஜீவகன் முதலானவர்களுடன் உலவிக் கொண்டிருந்தான். அப்போது பூரணச் சந்திரன்

தன் முழு ஒளியுடன் பிரகாசித்துக்கொண் டிருந் தான். எங்கும் ஒரே பிரகாசமாய் இருந்தது. அந்த அழகைக் கண்ட அரசன் தன்னுடன் இருந் தவர்களை நோக்கி, 'இத்தகைய அழகுடன் கூடிய இந்த இராத்திரியில் பொழுதை எவ்வாறு கழிக் கலாம்?' என்று வினவினான்.

ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தோன்றி யவாறு பதிலளித்தார்கள். ஆனால் ஜீவகன் மாத்திரம் அரசனை நோக்கி, 'அரசே! என்னுடைய மாந்தோப்பில் உலகம் போற்றும் உத்தமராகிய புத்தர் எழுந்தருளி இருக்கின்றார். அவரைக் கண்டு தரிசிப்பதே சாலவும் சிறந்ததாகும்,' என்று மொழிந்தான். அதைக் கேட்ட அரசன் ஜீவகன் சொல்லியது சரியென்று உணர்ந்து, 'அங்ஙனமே ஆகட்டும்,' என்றான்.

பின்னர் அரசன், தன் பரிவாரங்களுடன் ஜீவகனைத் துணைகொண்டு புத்தர் தங்கி இருந்த மாந்தோப்புக்குச் சென்று புத்தரைத் தரிசித்து அவர் கூறிய நன்மொழிகளால் நல்லறிவு பெற்று அவருடைய சிஷ்யனாயினான்.

புத்தர் உடல்நிலை மாறல்

புத்தர் இராஜக்கிருகத்தை விட்டுப் புறப்பட்டு அநேக இடங்களுக்குச் சென்று தமது கொள்கை களைப் பரப்பிக்கொண்டு வந்தார். வேசாலி என்

னும் இராஜ்ஜியத்தை அடுத்த ஓர் ஊரில் இருக்கையில் புத்தருக்குத்தேக அசௌக்கியம் ஏற்பட்டது. இனி நாம் பிழைக்கமாட்டோம் என்பதை உணர்ந்த புத்தர், அதைத் தம் பிரிய சிஷ்யரான ஆனந்தரிடத்தில் தெரிவித்து வேசாலிக்கு அருகிலிருந்த மற்ற சிஷ்யர்களையும் வரவழைக்கும்படி செய்து அவர்களுக்குத் தம் கருத்தைத் தெரிவித்தார்.

பிரயாணமும் விருந்தும்

பின்னர், புத்தர் வேசாலியை விட்டுப் புறப்பட்டு, பாவர் என்னும் மற்றொரு இடத்திற்குச் சென்றார். அங்கே உலோகவேலைகளைச் செய்து பிழைத்துக் கொண்டிருந்த சுண்டா என்னும் பெயரினைக் கொண்ட ஓர் அன்பன் உறைந்துவந்தான். அவன் புத்தரையும் அவர்தம் சிஷ்யர்களையும் கண்டு, அவர்களனைவரும் தன் வீட்டில் அன்று பகல் உணவருந்திச் செல்ல வேண்டுமென்று மிகவும் வேண்டிக் கொண்டான்.

அவனுடைய விருப்பத்துக்கு இணங்கிய புத்தரும் அவருடனிருந்த சீடர்களும் அவ்வன்பனுடைய வீட்டில் அன்று பகல் சாப்பிட்டார்கள்.

புத்தருக்கு முன்னரே உடம்பு அசௌக்கியமாய் இருந்ததென்று கூறினோம் அன்றோ? அதையும் பொருட்படுத்தாது அவர் தம் சிஷ்யர்களுடன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுக் குசினா

என்னும் பட்டணத்தை நோக்கிச் செல்லலுற்ருர். அவருக்கு ஆயாசமும் இளைப்பும் அதிகமாகிக் கொண்டே வந்தன. அதனல் புத்தர் அடிக்கடி இளைப்பாறும் பொருட்டு மரங்களின் அடியில் வீற்றிருந்து பின்னர் எழுந்து மெதுவாக நடக்க ஆரம்பித்தார்.

தாகவிடாய் தீர்தல்

அவர், இவ்விதம் சென்றுகொண் டிருக்கையில் அவருக்குத் தாகவிடாய் ஏற்பட்டது. அவ்வமயம் புத்தர் தம்மைத் தம்முடைய நிழலைப்போலத் தொடர்ந்து கொண்டிருந்த ஆனந்தரை நோக்கித் தமக்குப் பருகத் தண்ணீர் வேண்டுமென்று கேட்டார்.

சற்றுநேரத்திற்கு முன்னல்தான் சரக்குகளை ஏற்றிக்கொண்டு ஒரு கூட்டத்தார் அவ்வழியே சென்றனராதலின் அருகில் இருக்கும் சிறிய குளத்திலுள்ள தண்ணீர் முழுவதும் கலக்கப்பட் டிருக்கும் என்று எண்ணி, ஆனந்தர் உடனே சென்று தண்ணீர் கொண்டு வரவில்லை.

ஆனல் புத்தர் மேன்மேலும் தண்ணீர் கேட்டுக் கொண்டேயிருந்தனராதலின் அவர் அருகிலிருந்த குளத்திற்குச் சென்ருர். அத்தடாகத்திலிருந்த தண்ணீர் களங்கமற்று இருந்ததைக் கண்ட ஆனந்தர் மிகவும் சந்தோஷித்துத் தண்ணீரைக் கொணர்ந்து, புத்தருக்குக் கொடுத்தார்.

புத்தர் அந் நீரைப் பருகிக் களை தீர்ந்தார். பின்னர் புத்தரும் அவருடனிருந்த சிஷ்யர்களும் மெல்ல மெல்ல நடந்து சென்று குசிநாரா என்னும் பெயரினைக் கொண்ட நகரத்தைச் சேர்ந்தார்கள்.

அந் நகரமானது மண் வீடுகளால் கட்டப்பெற்றுக் கானகத்தின் நடுவே இருந்தது. அப் பட்டணத்தைச் சார்ந்து அழகான தோப்பு ஒன்று இருந்தது. அந்தத் தோப்பில் ஆனந்தர் புத்தருக்குப் படுக்கையை ஏற்படுத்திக் கொடுத்தார்.

அப் படுக்கையின்மீது புத்தர் படுத்துக் கொண்டு தம் சீடர்களுக்குச் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லிக்கொண் டிருந்தார். தமது சிஷ்யர்க ளெல்லோருக்கும் தேறுதல் வார்த்தைகள் பல மொழிந்து அவர் அவர்களுக்குத் தைரியத்தை உண்டாக்கினார்.

பின்னர், ஆனந்தர் குசிநாரா நகருக்குச் சென்று புத்தரின் நிலையை அந்நகர மாந்தருக்கு எடுத் துரைத்தார். அதன்மேல் அந் நகரினைச் சேர்ந்த மாந்தர்கள் அனைவரும் அச் சோலைக்கு வந்து புத்தரைத் தரிசித்துச் சென்றனர்.

புத்தர் குசிநாரா நகரத்தில் மரணத்தை எதிர் நோக்கி இருக்கும் சமயம் பிராமண வேதாந்தி ஒருவர் புத்தரைக் கண்டு தமது ஐயப்பாடுகளை

நீக்கிக்கொண்டு புத்தரின் சிஷ்யரானர். அவர் பெயர் சுபத்திரர் என்பதாகும். புத்தர் தம் மதத்தில் சேர்த்துக்கொண்ட சீடர்களில் இவர்தாம் கடைசியானவர்.

புத்தர் மோக்ஷமடைதல்

புத்தரின் சீடர்கள் அவர் அருகிலேயே இருந்தார்கள். புத்தர் மூன்ருவது ஜாமத்தில் இந்த உலக வாழ்வை நீத்து இன்பசாகரமாகிய பேரின்ப வீட்டினை எய்தினர்.

புத்தர் விண்ணுலக வாழ்வை எய்திய செய்தியை யறிந்த பிறநாட்டு ஜனங்கள் அவ்விடத்திற்கு வந்து இறுதியாக அவருக்கு மரியாதை செய்தார்கள்.

புத்தரின் ஞாபகச் சின்னங்கள்

ஒவ்வொரு நாட்டவரும் புத்தருடைய எலும்புகள் தங்களுக்கே சொந்தமானவை என்று வாதாடினர்கள். இதனல் அவர்களுக்குள் சச்சரவு ஏற்பட்டது. கடைசியில் அவர்கள் அனைவரும் சண்டை இட்டுக்கொண் டிருப்பதில் பயன் ஏதும் இல்லையென்று எண்ணிப் புத்தரின் எலும்புகளை எட்டுப் பாகங்களாக்கி ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியை எடுத்துக் கொண்டனர்.

புத்தர் விண்ணுலகத்தை எய்திய பிறகு அவர் ஞாபகார்த்தமாக அநேக இடங்களில் அவருக்குக்

கோயில்கள் பல கட்டி, அவரை ஜனங்கள் தெய்வமாகக் கொண்டாடி வரலானார்கள். இன்னும் சில இடங்களில் பலர் கோபுரங்கள் கட்டி, அவர் பெயர் என்றும் நிலைத்திருக்குமாறு செய்தனர்.

இத்தகைய ஞாபகார்த்த சின்னங்கள் இப்போதும் பற்பல பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் உள்ளார் இந்த ஞாபகார்த்த ஸ்தம்பங்களைத் 'தாகபாஸ்' என்று அழைத்து வருகின்றனர். மற்ற இடங்களில் இவைகளைத் 'தோப்புக்கள்' என்றும், 'ஸ்தூபிகள்' என்றும் சொல்லிவருகின்றார்கள்.

இச் சின்னங்கள் இருக்கும் இடத்திற்கு ஜனங்கள் சென்று அவைகளைப் பத்திர புஷ்பங்களால் அலங்கரித்துப் புத்தரின் நாமத்தைக் கொண்டாடி வருகின்றார்கள்.

எட்டாம் அத்தியாயம்

புத்தரின் முன்ஜன்மக் கதைகள்

புத்தர், "ஜீவாத்மாவானது பரமாத்மாவுடன் ஒன்ருய்க்கலக்கும் வரையில் தான் செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்கவாறு பிறப்பு இறப்புக் களை அடைந்து கடைசியில் நற்கருமங்களின் மிகுதியால் பரமாத்மாவுடன் ஒன்றுபட்டு விடுகிறது" என்று கூறியிருக்கின்ருரன்ரு?

அக் கொள்கைக் கிணங்கப் புத்தர் தமக்கு ஞானம் கைகூடுவதற்கு முன் பற்பல ஜன்மங்களை எடுத்தார் என்றும், அந்த ஜன்மங்களில் அவர் செய்த நற்கருமங்களின் மகிமையாலும் மிகுதி யாலும் அரச குலத்தில் உதித்து இறுதியில் நிர் வாணம் என்னும் மோட்ச நிலையை யடைந்தார் என்றும் பலர் கூறுகின்றனர். இதற்கு உதாரண மாகப் புத்தரைப்பற்றி அநேகம் கதைகள் வழங்கி வருகின்றன. அவைகளிற் சிலவற்றை ஈண்டு எடுத்துரைப்போம்.

முன்ஜன்மத்தின் பெயர்

புத்தர் முற்பிறப்புக்களில் 'போதிசாத்' என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தார். ஆகை யால் நாமும் அவருடைய முற்பிறப்பின் சரித்தி ரத்தைச் சொல்லுகையில் அவரைப் போதிசாத்

என்றே அழைப்போம். போதிசாத் என்னும் பெயர் ஞானத்தை அடைய முயலுகிறவன் என்று பொருள்படும்.

மான் உயர் பதவி யடைதல்

ஒரு கானகத்தைச் சேர்ந்த பள்ளத்தாக்கில் அநேக மான்கள் கூட்டமாகக் கூடி வசித்துக் கொண்டிருந்தன. அவைகளுக்குத் தலைமையான மான் ஒன்று இருந்தது. அது தன்னுடைய இனத்தார்கட்கு எத்தகைய தீங்கும் வராமல் பாதுகாத்துக்கொண் டிருந்தது.

இங்ஙனம் இருந்துகொண் டிருக்கையில் ஒரு வேடுவன் மான் கூட்டத்தைக்கண்டு அதை அரசனுக்குத் தெரிவித்தான். அவனுரைகளைக் கேட்ட அரசன், தன் பரிவாரங்களுடன் மான் கூட்டத்தை வேட்டையாடக் கருதிச் சென்று அதைச் சூழ்ந்து கொண்டான்.

அவ்வமயம் மான் கூட்டத்திற்குத் தலைமை வகித்துவந்த மான் தனது கூட்டத்தை ஆபத்தினின்றும் விடுவிக்கக் கருதிப் பக்கத்தில் ஓடிக் கொண்டிருந்த ஓடையின் நடுவே குதித்து அசையாமல் நின்றிருந்தது. அதைக்கண்ட மற்ற மான்கள் அதன் முதுகின்மேல் ஏறிக் குதித்து அக்கரை சேர்ந்து தப்பித்துக் கொண்டன.

அத்தனை மான்களும் தம் கால்களினால் அந்த மானை மிதித்ததனால் அந்த மானின் உடம்பிலிருந்து இரத்தம் ஆறாய்ப் பெருக ஆரம்பித்தது. எல்லா மான்களும் தாண்டி அக்கரை சேர்ந்த பிறகு மான்களுக்கெல்லாம் தலைமை பூண்ட அந்த மான் அவ்விடத்லேயே வீழ்ந்து இறந்து விட்டது. இத்தகைய நற்காரியம் செய்தபடியால் அந்த மான் உயர்ந்த பதவியை அடைய ஏது உண்டாயிற்று.

வர்த்தகம் செய்யப் புறப்படல்

போதிசாத் ஒரு பிறப்பில் காசியைச் சேர்ந்த பிராமண வியாபாரி ஒருவனின் புத்திரராக அவதரித்தார். அந்நகரத்தில் மற்றொரு வர்த்தகன் இருந்தான். அவனுக்கும் ஒரு குமாரன் இருந்தான். அவனும் போதிசாத்தும் ஏராளமான பொருளுடன் வியாபாரம் செய்யப் புறப்பட்டனர். ஆனால் போதிசாத், 'இருவரும் ஒன்றாகப் புறப்பட்டுச் சென்றால் வழியில் சௌகரியங்கள் ஏற்படாவென்று கருதி யாராகிலும் ஒருவர் முன்னதாகச் செல்லவேண்டும்,' என்று கூறினார்.

இராக்ஷதர் சூழ்ச்சி

அதைக் கேட்ட மற்றவன் தான் முதலில் செல்வதாகச் சொல்லித் தன் பொருளுடன் புறப்பட்டுப் போய்க்கொண் டிருந்தான்.

வழியில் இராக்ஷதர்கள் வசித்துக்கொண்டிருந்த காடு ஒன்று இருந்தது. அக் காட்டின் வழியாகச் செல்லுகையில் அங்கிருந்த இராக்ஷதர்கள் பொய் மழையை யுண்டாக்கினார்கள். அதோடு நில்லாது அவன் எதிரில் வந்து, 'எங்கு நோக்கினும் மழை பெய்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. அப்படியிருக்க நீ தண்ணீர் வேண்டித் தண்ணீர்ப் பைகளைச் சுமந்து செல்வது ஆச்சரியமாய் இருக்கின்றது,' என்று அவர்கள் சொன்னார்கள்.

அதைக் கேட்ட அவ்வர்த்தகன், அவர்கள் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டு, தண்ணீர் முழுவதையும் கீழே கொட்டிவிட்டான். பிறகு சற்றுத் தூரம் சென்றதும் அவ்வர்த்தகன், தன் அறியாமையை உணர்ந்து மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டே சென்றான்.

இவ்வாறு அவன் சென்றுகொண் டிருக்கையில் இருள் சூழ்ந்துகொண்டது. இருட்டிடவே வர்த்தகன், தன்னுடைய கூட்டத்தாருடன் வழியில் படுத்து நித்திரை புரியலானான். அதை உணர்ந்த இராக்ஷதர்கள், வியாபாரிகளைச் சூழ்ந்து அவர்களையும் அவர்களின் எருதுகளையும் அடித்துக் கொன்று தின்றுவிட்டார்கள்.

இராக்ஷதர் சூழ்ச்சி பலிக்கவில்லை

பின்னர், ஒரு மாதம் கழித்துப் போதிசாத் வர்த்தகம் செய்ய வெளியூருக்குத் தம் கூட்டத்து

டன் சென்றுகொண்டிருந்தார். அப்போது நாம் முற்கூறிய இராக்ஷதர்கள் போதிசாத்தைத் தங்களுடைய மாய வார்த்தைகளினால் ஏமாற்ற எண்ணினார்கள். ஆனால் அவர்களின் எண்ணம் போதிசாத்முன் பலியாது போயிற்று. ஆகவே அவருடன் சென்றவர் அனைவரும் பிழைத்தனர்.

முயலாகப் பிறந்து உயர்நிலை எய்தல்

ஒரு பிறப்பில் போதிசாத் முயலாகப் பிறந்திருந்தார். ஒருநாள் அந்த முயல் இருந்த வழியாக ஒரு முனிவர் சென்றுகொண்டிருந்தார். அம்முனிவரைக் கண்ட மிருகங்கள் அவருக்குத் தங்களால் ஆன சன்மானங்களைச் செய்தன.

ஆனால் அம்முயல் தன்னைத்தானே அர்ப்பணஞ் செய்து கொள்வதைவிட வேறுவழி ஏதும் இல்லையென்று எண்ணியது. எண்ணி அம்முயலானது அருகில் எரிந்து கொண்டிருந்த நெருப்பில் வீழ்ந்து இறந்தது.

அதன் மாமிசம் அந்த முனிவருக்கு இனிய ஆகாரமாகியது. இத்தகைய தன்னலமற்ற செயலினால் போதிசாத் புண்ணியம் செய்தவராய் ஒருபடி உயர்ந்த நிலையையெய்தினார்.

முனிவராகப் பிறந்து புண்ணியப் பேறடைதல்

ஒரு பிறப்பில் போதிசாத் முனிவராகப் பிறந்து ஒரு காட்டில் வசித்துக்கொண்டிருந்தார்.

அக்காலத்தில் எங்கும் மழை பெய்யவில்லை. எங்கெங்கும் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. ஒரு நாள் முனிவர் ஒரு மரத்தின் அடியில் உட்கார்ந்து, பிரார்த்தனை செய்துகொண்டிருந்தார். அப்போது அவர் பசியால் மெலிந்த பெண்புலி ஒன்றையும் அதன் இரண்டு குட்டிகளையும் கண்ணுற்றார்.

உடனே அம் முனிவர் அந்தப் புலி சென்று கொண்டிருந்த பாதையில் போய்ப்படுத்துக் கொண்டார். அந்தப் புலி அவரை அடித்துக் கொன்று தின்று தன் பசியை யாற்றிக் கொண்டது. இத்தகைய தன்னலமற்ற செய்கையினால் போதிசாத் பின்னும் புண்ணியத்தில் உயர்ந்தவரானார்.

எருதாய்ப் பிறந்து கௌரவம் பெற்றது

ஒரு பிறப்பில் போதிசாத் எருதாகப் பிறந்திருந்தார். எருது கன்றாய் இருக்கையில் அதனுடைய எஜமானன் அதைத் தன் குடிக்கூலிப்பாக்கிக்காக விற்றுவிட்டான். அதைப் பெற்றுக் கொண்ட வீட்டுக்காரி, அதனை அன்புடன் காப்பாற்றி வந்தாள். அது யாருக்கும் ஒரு தீங்கும் விளைவிக்காது நல்ல விதத்தில் நடந்துகொண்டது. நாளடைவில் அஃது அழகுடன் கூடிய பெரிய எருதாயிற்று.

இப்படி இருந்து வருகையில் ஒரு நாள் ஒரு வர்த்தகன் ஐந்நூறு வண்டிகளில் சரக்குகளை ஏற்றிக்கொண்டு வியாபாரத்தின் நிமித்தம் சென்று

கொண்டிருந்தான். அப்போது மூட்டைகள் சுமந்து சென்ற எருதுகள் பல ஒரு பாலத்தைக் கடக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவைகளால் அப்பாலத்தைக் கடக்க முடியவில்லை.

வர்த்தகன் பல பக்கங்களிலும் சுற்றிப் பார்த்தான். பாலத்திற்கு அருகில் இருந்த வயல் ஒன்றில் போதிசாத் என்னும் எருது மேய்ந்துகொண்டிருக்கக் கண்டு அதனை உதவுகிறவர்களுக்கு ஆயிரம் பொன் கொடுப்பதாக அவ் வர்த்தகன் கூறினன்.

இவ் வார்த்தைகள் அவ் வெருதின் செவிகளில் வீழ்ந்தன. விழவே அது தன் எஜமானியின் ஏழ்மை நிலையை நினைத்து அந்த வர்த்தகன் இருந்த இடத்திற்குச் சென்று அவனுடைய ஐந்நூறு வண்டிகளையும் பாலத்திற்கு அப்பால் இழுத்துக்கொண்டுபோய் விட்டு அவன் கொடுத்த ஆயிரம் பொற்காசுகளையும் கழுத்தில் கட்டிக் கொண்டு போய் அதைத் தன் எஜமானி யிடத்தில் கொடுத்தது.

எஜமானி, விஷயத்தை அறிந்துகொண்டு அவ் வெருதின் புத்திசாலித்தனத்தை மெச்சி அதைக் கொண்டாடிக் கௌரவித்து வந்தாள்.

பிராமணனுய்ப் பிறந்து உயிர்ப்பலி நீக்கல்

ஒரு பிறப்பில், போதிசாத் பிராமண குடும்பத்திற் பிறந்தார். அவர் பெற்றோர்கள் அதிக

சொத்தை வைத்து விட்டு இறந்து விட்டார்கள். அச் சொத்துக்கள் யாவற்றையும் போதிசாத் தான தருமங்களில் செலவழித்துவிட்டுத் தவஞ்செய்ய இமயமலைக்குச் சென்றார்.

இச்சமயத்தில் பிரம்மதத்தர் என்பவர் காசியை ஆண்டுகொண்டிருந்தார். அவர் ஒரு நாள் தம் படுக்கையிற் படுத்து உறங்கிக்கொண்டிருக்கையில் பற்பல விதமான கனவுகளைக் கண்டு திடுக்கிட்டு எழுந்தார். மறுநாள் அவர் ஜோதிடர்களிடத்தில் தமது கனக்களைத் தெரிவித்தார்.

அந்த ஜோதிடர்கள், 'உமக்கு ஆபத்து வரப் போகின்றது. ஆகையால் நீர் ஏதேனும் பலி கொடுத்துவிடின் ஆபத்து வராமல் போய்விடும்,' என்று தெரிவித்தார்கள்.

அநேக மிருகங்களைச் சேர்த்துக்கொண்டு, அவைகளைப் பலி இடுவதற்காக வேண்டிய ஏற்பாடுகளை அரசனுடைய குருக்கள் செய்துகொண்டு வரலானர்.

இச்சமயம் போதிசாத் காசியில் இருந்தார். அவருக்கு இச்சங்கதி தெரிந்து அரசனிடஞ் சென்று, பலியிடுவதற்காகச்சேர்த்து வைக்கப்பட்டிருந்த மிருகங்களை விடுவித்துவிட்டு, அரசன் கண்ட கனக்களின் உண்மைக் கருத்தையும் சரியாக எடுத்துரைத்தார். அதன்மேல் அரசன் அம்மிருகங்களை

விட்டு விட்டான். இத்தகைய நற்செயலினுலும் போதிசாத் நற்பதவியையடைய ஏதுஉண்டாயிற்று.

யானையாகப் பிறந்து தாயைக் காப்பாற்றல்

போதிசாத், ஒரு பிறப்பில் யானையாகப் பிறந்திருந்தார். அப்போது அவர் அழகுடன் விளங்கினுர். போதிசாத் யானைக்கு அடங்கி எண்பதினுயிரம் யானைகள் நடந்து வந்தன. அதன் தாய் குருடாய் இருந்தது. அதன்மேல் குட்டியானை தன் தாய்க்காக வேண்டிய பழவகைகளைக் கொண்டு வந்து கொடுத்துக்கொண்டு வந்தது.

போதிசாத் யானை இங்ஙனம் இருந்துகொண்டு இருக்கையில் எங்கும் ஆகாரம் கிடைப்பது அரிதாய் விட்டது. ஆனுல் குட்டி யானை, தன் தாயை அழைத்துக்கொண்டு தனி இடத்திற்குச் சென்றது. ஆங்கு அவை இரண்டும் சௌக்கியமாய் வாழ்ந்து வந்தன.

ஒருநாள் அந்த யானை, வழிதப்பிச் சென்ற காட்டிலாகா உத்தியோகஸ்தன் ஒருவனைக் கண்டது. அந்த யானையானது அவனுடைய பரிதாப நிலைக்கு இரங்கி, அவனைத் தன் முதுகின்மீது ஏற்றிக்கொண்டு போய் அவனுடைய இல்லத்திற்கருகே இறக்கிவிட்டது. எனவே அந்த உத்தியோகஸ்தன், அந்த யானையின் நற்குணத்தைப் புகழ்ந்து கொண்டாடினுன்.

இவ்வமயம் அரசனின் பட்டத்து யானை இறந்து விட்டது. ஆகவே அரசன், பட்டத்து யானை ஒன்றைத் தேடிக்கொண் டிருந்தான். யானையினுல் காப்பாற்றப்பட்ட காட்டிலாகா உத்தியோகஸ்தன் அரண்மனையைச் சேர்ந்து அரசனிடத்தில் தான் காட்டில் கண்ட யானையின் நுட்ப புத்தியை விரிவாக எடுத்துரைத்தான்.

காட்டிலாகா உத்தியோகஸ்தன் எடுத்துக் கூறியவைகளைக் கேட்ட மன்னன், அந்த யானையின் அறிவுக்கு வியந்து, அஃது ஒன்றே பட்டத்து யானையாய் இருப்பதற்கு உரியதாகு மென்று கருதி, அதைத் தேடிக்கண்டு பிடித்து வருமாறு தன் வேலையாட்களுக்குக் கட்டளை இட்டு அனுப்பினுன்.

அரசனின் கட்டளைகளை ஏற்ற வேலையாட்கள், அனேகம் பழகிய யானைகளை அழைத்துக்கொண்டு காட்டிற்குச் சென்று, தேடிப்பார்த்துக் காட்டிலாகா உத்தியோகஸ்தன் கூறிய அங்க அடையாளங்களுடனிருந்த யானையைப் பிடித்துக் கொண்டுவந்து அரசன் முன் நிறுத்திஞர்கள்.

அரசன், அதைக் கண்டு மிகவும் சந்தோஷப் பட்டான்.

ஆனுல் அந்த யானையானது இரை ஒன்றும் எடுத்துக்கொள்ளாமல் வாட்டத்துடன் இருந்தது.

Q4:33
N32 L2

அதைக் கண்ட அரசன், அதிக வருத்தப்பட்டு அந்த யானை உணவு உட்கொள்ளாமல் இருப்பதற்கான காரணத்தை அறிய விரும்பினன்.

பிறகு அந்த யானையானது அரசனைப் பார்த்து, 'வேந்தே! என்னுடைய தாய்க்குக் கண் தெரியாது. அதற்கு நான் என்னுல் கூடுமான வரைக்கும் உணவு முதலியவற்றைத் தேடிக் கொண்டுவந்து கொடுத்து அதைக் காப்பாற்றிக் கொண்டு வந்தேன். இப்போது தாங்கள் என்னைப் பிடித்துக்கொண்டு வந்து விட்டதனுல் என்னுடைய தாய் ஆகாரத்திற்காக மிகவும் கஷ்டப் படுவாள். அதற்காக நான் உணவு முதலானவை ஒன்றும் அருந்தாது வருத்தமாய் இருக்கின்றேன். என்னுடைய தாய்க்கு உதவி செய்கிறவர்கள் இல்லாதபடியால் அவள் கட்டாயம் இறந்தே விடுவாள். ஐயோ! நான் என்ன செய்வேன்? என்னை விடுதலை செய்துவிட்டால் நான் என் தாய்க்குத் துணையாய் இருப்பேன்!' என்று சொல்லியது.

யானை இவ்வாறு சொன்னதைக் கேட்ட அரசன், அதை அதன் புத்திசாலித்தனத்திற்காக வியந்து விடுதலை செய்யக் கட்டளையிட்டான். விடுதலையடைந்த யானை, தன் தாயினிடம் போய்ச் சேர்ந்து சௌக்கியமாய் வாழ்ந்து வந்தது.

முற்றிற்று

TAMIL NADU ARCHIVES LIBRARY
No.
107725